# கிரகித்தல்

# COMPREHENSION



கந்தையா குணராசா
- செங்கை ஆழியான் -

கமலம் பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரகித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரகித்தல்

★

க. குணராசா, B. A. Hons. (Cey.), M.A., S. L. A. S.

(முன்னாள்: புவியியல் விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை - கொழும்பு. புவியியல் ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி. பகுதிநேர விரிவுரையாளர், தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம். அதிதிப் போதனாசிரியர், ஆசிரிய கலாசாலை, கொழும்புத்துறை. ஆலோசக ஆசிரியர், 'புவியியல்' காரியாதிகாரி; கிண்ணியா உதவி அரசாங்க அதிபர், கிளிநொச்சி.)

மேலதிக அரசாங்க அதிபர், (காணி),
பிரதிக் காணி ஆணையாளர், கிளிநொச்சி.

★

கமலம் பதிப்பகம்
82, சிறவுண் வீதி,
யாழ்ப்பாணம் :: இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

O முதற் பதிப்பு: ஜனவரி 1984
O ஆறும் திருத்திய பதிப்பு: மே, 1989
(C) திருமதி கமலா குணராசா,
82, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
O அச்சுப் பதிவு: ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.
O வெளியீடு: கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

விலை: 25/-

KIRAKITHTHAL — A book on Comprehension in Tamil by: (K. Kunarasa B. A. Hons. (Cey), M. A., S. L. A. S.) □ (C) Kamala Kunarasa B. A. (Cey.), 82, Brown Road, Jaffna. □ Sixth Edition: May 1989. □ Published by: Kamalam Pathippakam, Jaffna. □ Cover: Thavam / Vijeya □ Printers: Siri Lanka Press, K. K. S. Road, Jaffna. □ Pages: 6 + 50 = 56.

Price: Rs. 25/-

விற்பனையாளர்:

ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஒருவனின் அறிவுத்திறனை மதிப்பிடுவதற்கும் கண்டறிவதற்கும் சில தேர்வுகள் அத்தியாவசியமாகின்றன. பொதுவாக உலக நாடுகளில் பொது அறிவு, நுண்ணறிவு, கிரகித்தல் ஆகிய மூன்று துறைகளில் ஒருவனின் அறிவுத்திறன் மதிப்பிடப்படுகிறது. சொல்பவற்றிலிருந்தும் படிப்பவற்றிலிருந்தும் மெய்க் கருத்தைப் புரிந்துகொள்வது கிரகித்தலாகும்.

கிரகித்தற் பயிற்சியை வளர்த்துக் கொள்வதற்குக் கைக்கொள்ளப்படும் முறைகளை நான்கு வகுதிகளாக நான் இந்நூலில் இனங்கண்டு விபரித்திருக்கின்றேன்; நான் என்ற தன்முனைப்பிற்குச் சற்று அழுத்தம் தந்திருக்கின்றேன்: கிரகிக்கும் மெய்க் கருத்து, கிரகிக்கும் சுருக்கக் கருத்து, கிரகிக்கும் விரிவுக் கருத்து, கிரகிக்கும் மாற்றுக்கூற்றுக்கள் என்பனவே அவையாம்.

கல்வியறிவோடு இயல்பான பகுத்தறிவு, சிந்தனைத் திறன், ஆக்கபூர்வச் செயற்பாடுகள், பலரிடையே தன்னை இனங்காட்டும் ஆளுமை, பொறுப்பேற்கும் ஆற்றல் என்பனவற்றைக் கிரகித்தற்றிறன் வளர்க்கிறது, வழங்குகின்றது.

வாழ்த்துக்கள்; வணக்கம்.

82, சிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
10-05-1989.

க. குணராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் இத்துறை சார்ந்த ஏனைய நூல்கள்

- ஆரம்பப் பொது உளச் சார்பு
  (கமலம் வெளியீடு)
- பொது உளச் சார்பு
  (நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை வெளியீடு)
- பொது அறிவு
  (ஸ்ரீ லங்கா வெளியீடு)
- பொதுக் கட்டுரைகள் (அச்சில்)
  (பல்துறை சார்ந்த கட்டுரைகள்)
- விடய ஆய்வு (அச்சில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம்: ஒன்று

# கிரகிப்புத் திறன்

ஒரு மனிதனின் அறிவு, நுண்ணறிவு, ஆய்வுத்திறன், பொதறிவு, ஆளுமை என்பனவற்றினை அறிவதற்கும் மதிப்பீடுவதற்கும் உலக நாடுகளில் எழுத்து மூலப் பரீட்சைகளும், வாய்மொழித்தேர்வுகளும் இன்று கைக்கொள்ளப் பட்டு வருகின்றன. கல்வியறிவு என்பதற்கும், அறிவுத் திறன் என்பதற்கும் இடையில் பெரும் வேறுபாடுள்ளது. கல்வியறிவு ஒருவன் படிக்கின்ற நூல்களாலும் ஆசிரியர்களாலும் அவனில் சேர்க்கப்படும் திறனாகும். அறிவுத்திறன் அவ்வாறானதன்று. கல்வியறிவோடு இயல்பான பகுத்தறிவு, சிந்தனைத்திறன், ஆக்க பூர்வச்செயற்பாடுகள், பலரிடையே தன்னை இனங்காட்டும் ஆளுமை, பொறுப்பேற்கும் ஆற்றல் என்பனவற்றைக் கொண்டதாகும்.

எனவே, ஒருவனின் அறிவுத்திறனை மதிப்பிடுவதற்கும் கண்டறிவதற்கும் சில தேர்வுகள் அத்தியாவசியமாகின்றன. அவ்வகையில் முக்கியமாக மூன்று துறைகளில் ஒருவனின் அறிவுத்திறன் மதிப்பிடப்படக் கூடியதாகும். அவை -

(அ) பொது அறிவு

(ஆ) நுண்ணறிவு

(இ) கிரகித்தல்

### பொது அறிவு

தனது நாட்டின் அரசியல், சமூக, கலாச்சார, பொருளாதார சூழ்நிலைகள், நடைமுறைத் தேசிய அனைத்துலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவகாரங்கள், விஞ்ஞான தொழில் நுட்ப விடயங்கள் என்பவை உட்படத் தானிருக்கும் சூழல் பற்றிய தெரிதிறனை மதிப்பிட உதவுவது பொது அறிவாகும். சமூகத்தின் ஒவ்வொரு செயல்களுக்கும் காரண காரியங்களுண்டு ஒவ்வொரு இயற்கை நிகழ்வுகளுக்கும், ஒவ்வொரு உயிரினங்களின் இயல்புகளுக்கும் காரண காரியங்களுள்ளன. வானவில் தோன்றுவதற்கும், யானை புழுதியை வாரித் தன்மீது இறைத்துக் கொள்வதற்கும், மங்கல காரியங்களுக்கு நிறைகுடம் வைப்பதற்கும் அர்த்தமுண்டு. அரசியல் முரண்பாடுகள் தோன்றுவதற்கும், போர்கள் நிகழ்வதற்கும், நாடுகளின் அபிவிருத்தி வேறுபாடுகள் காணப்படுவதற்கும் விளக்கங்களுள்ளன. அவை புரிந்து கொள்ளப்படவேண்டிய அம்சங்களாகும்.

## நுண்ணறிவு

ஒருவன் தர்க்கரீதியாக நியாயங்காணுந் திறனையும் தரப்படும் தகவல்களிலிருந்து ஊகித்துணரும் ஆற்றலையும் மதிப்பீடு செய்வதற்கு நுண்ணறிவு உதவுகின்றது. ஒருவனின் சொற்புலமை, எண்புலமை, கட்புலமை என்பனவற்றினை மதிப்பிடுவதன்மூலம் அவனின் தர்க்கரீதியான நியாயங் காணுந் திறனை வெளிப்படுத்த முடியும். குறுகிய நேர மதிப்பீடு நிலைமை அவனின் ஊகித்துணரும் ஆற்றலை மதிப்பிட உதவும். ஒருவனின் பொதுளச் சார்பை வெளிப்படுத்துவது நுண்ணறிவாகும். தன்னைத் தானே மதிப்பிடுவதற்கு நுண்ணறிவு உதவும்.

## கிரகித்தல்

சொல்பவற்றிலிருந்தும் படிப்பவற்றிலிருந்தும் மெய்க்கருத்தைப் புரிந்து கொள்வது கிரகித்தலாகும். ஒரு வாசகப் பகுதியைப் படிக்கும்போது அல்லது கேட்கும்போது அதற்கான அர்த்தம் இரண்டாக இருக்க முடியாது. அர்த்தம் ஒன்றாக இருக்க அதன் பொருளைப் பலவாறாகப் புரிந்து கொள்பவர்கள் இருக்கிறார்கள். அர்த்தத்தைச் சரியாகப் புரிந்து கொள்பவர்களும் இருக்கிறார்கள். சரியாகப் புரிந்து கொள்பவன் அதன் மெய்க்கருத்தைப் புரிந்து கொள்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகிப்புத்திறன் வாய்ந்தவனாக இருக்கிறான். ஒருவனின் கிரகிப்புத்திறனை வெளிக்கொணர்ந்து அவன் அறிவுத்திறனை மதிப்பிடுவதற்குப் பல முறைப் பயிற்சிகளுள்ளன. அவற்றினை இந்நூலில் விரிவாக ஆராய்வோம்.

## 1.1 கிரகித்தலின் அடிப்படை

1.1.1. பொதுக்கூட்டமொன்றில் பேச்சாளரொருவர் பின்வருமாறு பேசுகிறார்:-

''ஆளொவ்வொருவரும், தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராயிருத்தற்கான அல்லது மேற்கொள்ளுதற்கான சுதந்திரமுட்பட, சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பனவற்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஆளெவரும் சித்திரவதைக்கு அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது. சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லாரும் சமமானவர்கள் அத்துடன் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கும் உரித்துடையவர்கள். இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற் கொள்கை, அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்தப் பிரசைக்கும் ஓட்டு ஓரங்காட்டுதலாகாது.'' 1

கூட்டத்திற்குச் சமூகந் தந்தவர்களில் பலரை ஒரு கேள்வி கேட்போம்:

''பேச்சாளர் எதைப்பற்றிப் பேசுகிறார்?''

இவ்வினாவிற்குரிய விடைகள் பின்வருமாறு அமையலாம்.

ஒருவர்: ''பேச்சாளர் மதச் சுதந்திரம் பற்றிப் பேசுகிறார்.''

இரண்டாமவர்: ''அவர் மனித சுதந்திரம் பற்றிப் பேசுகிறார்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றுமவர்: "அவர் தண்டனைகளைப் பற்றிப் பேசுகிறார்."

நான்காமவர்: "அவர் அடிப்படை உரிமைகளைப் பற்றிப் பேசுகிறார்."

ஐந்தாமவர்: "அவர் மதத்தைப்பற்றி, இனத்தைப் பற்றி, மொழியைப்பற்றிப் பேசுகிறார்."

ஆறுமவர்: "சட்டத்தின் முன் எல்லாரும் சமன் என்கிறார்."

உண்மையில் பேச்சாளரின் வாசகத்தில் இரண்டு கருத்துக்கள் இல்லை. இரண்டு அர்த்தமுமில்லை. அவர் பேச்சைக் கிரகித்தவர்கள் தம்மறிவுத் திறனுக்கு அல்லது அறிவின்மைக்கு ஏற்ப விளக்கந் தந்துள்ளனர்.

அவர் எதைப்பற்றிப் பேசினார்?

மனித அடிப்படை உரிமைகளைப்பற்றியே பேசினார். இதுவே மெய்க்கருத்தாகும்.

எனவே, கிரகித்தலின் முதலடிப்படை கருத்தைக் கிரகித்தல் ஆகும். இதனைக் கிரகிக்கும் மெய்க்கருத்து எனவும் கூறலாம்.

1.1.2. ஆய்வுமன்றம் ஒன்றில் பேராசிரியர் ஒருவர் தன் ஆய்வுக் கட்டுரை ஒன்றினை வாசிக்கின்றார்:

*"சமூக வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு மனிதன் திறன் பெற்றிருக்கிறான் என்பது மட்டுமல்ல அத்தகைய சமூக வாழ்க்கைக்கான தேவை அவனுள்ளேயே கூடவே தோன்றி விடுகிறது என்பதுமாம். மனவெழுச்சிகளின் வளர்ச்சி, நுண்ணறிவின் வளரெழுச்சி, தனது சுதந்திரத்திற்கும் நிறைவான ஆளுமையின் வளர்ச்சிக்கும் தேவையான ஒரு சில பொருட்கள், பண்டங்கள், ஆடம்பரப் பொருட்கள் போன்றவற்றைச் சமூகத்தின் உதவியின்றி அடையமுடியும் என்றெண்ணிப் பார்ப்பதுகூட முடியாது. சமூகத்திலிருந்து துண்டிக்கப்பட்ட எந்தவொரு மனிதனும் இயல்பான வளர்ச்சியடைந்ததில்லை. காடுகளில் காணப்படும் குகைகளின் குகை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான நீரையும், ஆறுகளின் அமுதம் போன்ற நீரையும் குடித்து, இயற்கையில் கிடைக்கும் தெவிட்டாத் தீஞ்சுவைக் கனிகளை உண்டு, மனமகிழ்வோடு எந்தவிதமான சமூகக் கட்டுப்பாடுகளும் தளைகளுமின்றி, ஆதிகாலத்து மனிதன் இயல்பாக வாழ்ந்தது பற்றிக் கூறப்படுபவையெல்லாம் கட்டுக்கதைகள் தாமேயன்றி, அவற்றிற்கு வரலாற்றுச் சான்று கிடையாது. வேட்டையாடுதல் போன்றவற்றில் வேலைப் பங்கீட்டோடு பலர் ஈடுபட்டு வாழ்ந்ததைப்பற்றி விளக்கிக் கூறும், அல்டமிரா போன்ற குகைகளில் காணப் படும் சான்றுகளைக் கொண்டு, குகை வாழ் மனிதனைப் பற்றிக் கூறப்பட்டு வருகிறது. ஆனால், அவனும் நம்மைப் போன்றே சமூகவியல்பினனாகத்தான் இருந்திருக்கிறான். சமூகம் மனித இயல்பின்மேல் ஏற்றப்பட்டதோ அல்லது ஏற்செயலாக சேர்க்கப்பட்டதோ அன்று. மனிதனுடன் தோன்றிய ஒரு முக்கியமான தேவையை அது பூர்த்தி செய்கிறது. அது மனித இயல்புடன் இணைந்து நிற்கின்றது. அரிஸ்டாடில் கூறியதுபோல, மனிதன் இயல்பிலேயே சமூகத்தின் பாற் பட்டவன்.'' 2

பேராசிரியர் அமர்ந்ததும் தலைவர் எழுந்திருக்கிறார். வழமை போலப் பேராசிரியரின் கருத்துக்களைச் சுருக்கமாகக் கூற முற்படுகிறார்:

''பேராசிரியர் வெகு அற்புதமாகப் பேசினார்கள். சமூ கத்தில் தனி மனிதனின் முக்கியம் பற்றி எடுத்துரைத் தார்கள். ஆதியில் மனிதன் தனித்து வாழ்ந்தான் என்றும், சூழலில் கிடைத்த உணவுகளைச் சேகரித்து உண்டான் என் றும் வரையறுத்துக் கூறினார். அல்டமிரா குகைவாழ் ம னி தன் தனித்தே வாழ்ந்தான். தனித்து வாழ்வது எவ்வளவு அற்புதமான வாழ்க்கை என்பதை எண்ணிப் பாருங்கள். இந்த அற்புதமான கருத்தை முன்வைத்த பேராசிரியரைப் பாராட்டி, அடுத்ததாக பேராசிரியர் இளவழகனாரை......''

சபையோர் கரகோசம் செய்கிறார்கள். முதலில் பேசிய பேராசிரியருக்கு வி ய ர் த் து விறுவிறுக்கிறது. தான் முன் வைத்த கருத்தைத் தலைவர் எவ்வளவு விபரீதமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகித்து விட்டார் என்பதோடு கரகோசம் செய்து பாராட்டுத் தெரிவிக்கும் சபையினர் எவ்வளவு தூரம் தப்பாக அர்த்தப்படுத்தி விட்டனர் என்பதைக் கண்டபோது. துயரும், ஏமாற்றமும் அவரைக் கவ்வுகின்றன.

அடுத்து பேராசிரியர் இளவழகனுர் எழுந்திருக்கிருர்:

''என் பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்னர் என் முன் பேசிய பேராசிரியரின் கருத்துக்களுக்கு விபரீத அர்த்தம் தந்த தலைவரின் கூற்றுகளுக்கு விளக்கம் தருவது அவசியமாகின்றது. தனிமனித வாழ்க்கையைப்பற்றிப் பேராசிரியர் தனது உரையில் எதுவும் கூறவில்லை. மனிதனின் சமூகவியல்புபற்றியே அவர் பேசினுர். மனிதன் தனித்து வாழ முடியாது. வாழவுமில்லை. ஏதாவதொருவகைச் சமூகத்தில் தான் மனிதன் இருந்து வருகிருன். சமூகமின்றி அவனுல் வாழமுடியாது என்பது தான் உண்மை. இயற்கையான சூழலில் கிடைத்தவற்றை உண்டு மனிதன் தனித்து வாழ்ந்தான் என்பது கட்டுக்கதை. வரலாற்று ஆதாரமற்றவை. மனிதன் இயல்பிலேயே சமூகத்தின் பாற்பட்டவன் என்பதுதான் என்முன் பேசிய பேராசிரியரின் கூற்ருகும். அவர் பேச்சைத் தலைவர் தவருகக் கிரகித்தமையால் கருத்தை மாற்றிக் கூறிவிட்டார்......''

முதலில் பேசிய பேராசிரியரின் முகத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் பரவுகின்றன. சபையோர் இதற்கும் கரகோசம் செய்கின்றனர். எனவே, கிரகித்தலின் இரண்டாம் அடிப்படை ஒரு நீண்ட உரையை அல்லது வாசகத்தைச் சுருக்கிக்கிரகித்தல் ஆகும். இதனைக் கிரகிக்கும் சுருக்கக்கருத்து எனலாம்.

முதலில் பேசிய பேராசிரியரின் கருத்துக்களைத் தலைவர் கிரகித்துக்கொண்ட சுருக்கக் கருத்துத் தப்பானது. இரண்டாவது பேராசிரியரே சரியாகக் கிரகித்திருக்கிருர் முதல் பேராசிரியரின் நீண்ட உரையை, இரண்டாவது பேராசிரியர் சுருக்கக்கிரகித்தல் செய்திருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.1.3 அரசியல் கூட்டமொன்றில், அரசியல்வாதியொரு வர் காரசாரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார். அவ ருடைய பேச்சை அவருக்கு அரசியலில் எதிரான அரசியல்வாதி ஒருவரும் கேட்கிறார். முன்னவர் தனது சொற்பொழிவில், பின்னவரை வெகு பண் பாகத் தாக்குகிறார்:

''நாங்கள் இந்த நாட்டிற்கு எதுவுமே செய்யவில்லை யாம். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்து இந்த விளைவை அவர்கள் எழுப்பி வருகின்றனர். நாங்கள் ஆட்சி யிலிருந்தபோது எத்தனை கைத்தொழிற்சாலைகளை அமைத் தோம்? எத்தனை வீடுகளை அமைத்தோம்? எத்தனை வீதிகளைச் செப்பனிட்டோம்? எத்தனை பேருக்கு வேலை வழங்கி அவர் களை வாழவைத்தோம்? இவ்வளவும் செய்திருக்க அவர்கள் கூறுகிறார்களாம்: நாங்கள்தான் இந்த நாட்டில் இனங் களுக்கிடையே மோதலை ஏற்படுத்தினேமாம் இனவாத அர சியல் பேசினேமாம் வகுப்புக் கலவரங்களைத் தூண்டினே மாம். மாண்புமிகு எதிர்க்கட்சி நண்பருக்கு இந்தவிடத்தில் அறுதியிட்டு, திட்டவட்டமாக, இடித்துரைக்கின்றேன். உங்கள் பேச்சுக்கள் 'பூமராங்' ஆக மாற அதிக நேரமெடுக்காது...''

அரசியல் வாதியின் பேச்சை செவிமடுத்துக் கொண்டி ருந்த, எதிர்கட்சி அரசியல்வாதிக்கு யாவும் புரிந்தது; ஒன் றைத்தவிர

''பூமராங்' என்கிறானே .....?''

அவருடன் கூடஇருந்தவர்கள் கூறுகிறார்கள்:

ஒருவர்: ''முட்டாள்கள் என்பதை பூமராங் என்கிறார்.''

இரண்டாமவர்: ''அப்படியல்ல பூமராங் என்பதன் அர்த் தம் பேயர்கள் ஆவது. விரைவில் எங்கள் எல்லாரையும் பேயர்களாக்கப் போகிறார் களாம்.''

மூன்றாமவர்: ''பூமராங் என்பது அவுஸ்திரேலிய அபோறி ஜெனிஸ், அதாவது ஆதிக்குடிகள் ஆயுதமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயோகித்த ஒரு வளை தடி. இந்த வளை தடியை ஒரு இலக்கு நோக்கி எறிந்தால் அந்த இலக்கை இந்த வளைதடி தாக்கிவிட்டு எறிந்தவனிடமே திரும்பி வரும். எறிந்தவன் அசட்டையாக இருந்தால் சிலவேளைகளில் இந்த வளைதடி, அவனையும் தாக்கிவிடும். நீங்கள் பேசுபவை உங்களை நோக்கியே திரும்பி வரும் என்றார்.''

மூன்றாமவர் 'பூமராங்' என்ற பதத்திற்குக் கூறிய அர்த்தமே சரியானது. 'பூமராங்' என்ற ஒருபதத்தின் விரிவுக்கருத்து அது. எனவே, கிரகித்தலின் மூன்றாவது அடிப்படை ஒரு பதத்தை அல்லது கூட்டுப்பதங்களை விரிவுக் கிரகித்தல் ஆகும். இதனைக் கிரகிக்கும் விரிவுக் கருத்து எனலாம்.

1.1 4 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினர் வெளியிட்ட ''வரிமுறை'' என்ற கையேட்டில் பின்வருமாறு வருகிறது:-

''வட்டியிலிருந்து வரும் வருமானம் என்பது, அதனைப் பெற்றுக்கொண்டாலென்ன பெறுவிட்டாலென்ன அவ் வட்டியாக வரவேண்டிய முழுத்தொகையுமாகும். கழிவுகள் எவையும் அனுமதிக்கப்படமாட்டா. வட்டியெதுவும் செலுத்தப்படாதிருந்து அதை அறவிடமுடியாதெனக் காணும்போது, வரி செலுத்துபவர் அத்தொகையை வருமானத்திற் சேர்க்காது விட்டு அதனை வரி மதிப்பீட்டாளருக்கு அறிவிக்கலாம்.'' [3]

மூவர் இப்பகுதியை வாசிக்கிறார்கள். அவர்கள் மூவரும் மூன்று விளக்கங்கள் தருகிறார்கள்:

ஒருவர்: ''வட்டியிலிருந்து பெறப்படும் வருமானத்திற்கு வருமானவரி கட்டத் தேவையில்லை.''

இரண்டாமவர்: ''வட்டி அறவிடப்படாதிருந்தால் வருமானவரி கட்டத் தேவையில்லை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றுமவர் : "வட்டி கிடைத்தால் வருமானவரி கட்ட வேண்டும். வட்டியை அறவிடமுடியா விட்டால் வரிமதிப்பீட்டாளருக்கு அறி வித்து வரிவிலக்குப் பெறலாம்."

ஒரு நூலிலுள்ள வாசகப்பகுதிக்கு மூவர் மூன்று விளக் கங்கள் தந்துள்ளனர். அவரவர் அவ்வாசகப் பகுதியைக் கிரகித்த விதத்தில் அர்த்தப்படுத்தியிருக்கின்றனர். எனவே அவர்களின் கூற்றுக்களில் பொருந்தாக் கூற்றுக்களும், பொருந்துங் கூற்றுக்களும் காணப்படுகின்றன.

தரப்பட்டிருக்கும் வாசகப்பகுதிக்குப் பொருத்தமான கூற்று எது?

மூன்றுமவர் கிரகித்தமையே சரியான கூற்றகவுள்ளது.

எனவே கிரகித்தலின் நான்காம் அடிப்படை ஒரு வாச கப்பகுதிக்குப் பலர்கூறும் பொருந்தாக் கூற்றுக்களையும், பொருந்துங் கூற்றுக்களையும் அவதானித்து சரியான கூற் றினைக் கண்டறிதலாகும். இதனை கிரகித்தல் மாற்றுக் கூற் றுக்கள் அல்லது கிரகிக்கும் கூற்றுக்கள் எனலாம்.

ஆகவே, கிரகித்தலில், நான்கு வழிமுறைகள் உள்ளன. அவை:

(1) கருத்தைக் கிரகித்தலில் அல்லது கிரகிக்கும் மெய்க் கருத்து.

(2) சுருக்கக் கிரகித்தல் அல்லது கிரகிக்கும் சுருக்கக் கருத்து.

(3) விரிவுக் கிரகித்தல் அல்லது கிரகிக்கும் விரிவுக் கருத்து.

(4) கிரகித்தல் மாற்றுக் கூற்றுக்கள் அல்லது கிரகிக்கும் கூற்றுக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம்: இரண்டு

# கிரகிக்கும் மெய்க்கருத்து

ஒரு வாசகப்பகுதியைக் கேட்கும்போது அல்லது வாசிக்கும்போது அவற்றின் கருத்தை ஒருவன் எவ்வாறு கிரகிக்கிறான் என்று மதிப்பிடுவது அவன் அறிவுத்திறனை வெளிப்படுத்தும் தேர்வாக அமையும். தரப்படும் வாசகப் பகுதியின் மெய்க்கருத்து எதுவென ஒரு வாக்கியத்தில் ஒருவன் நிர்ணயிப்பானாகில், அவன் அறிவுத்திறன் கிரகித்தலில் முதன்மையானது. ஓராயிரம் வார்த்தைகளில் விபரிக்கப் படும் விடயத்தின் மெய்க்கருத்தை ஒரு சில வார்த்தை களில் தெளிவுபடுத்தும் திறன், உண்மையில் பல் துறை சார்ந்த கலைகளினதும் அறிவியல்களினதும் நெறிசார்ந்த அறிவுடையவர்களுக்கேயுரியது. எடுத்துக் காட்டாகச் சில உதாரணங்களை நோக்குவோம்.

## 2 1. பயிற்சி:

*'ஒரு சிறுவன் தனது வயது மற்றும் உள, உடல் நலம் என்பனவற்றையெல்லாம் புறக்கணித்தும், வீட்டு வேலை களுக்காக எவ்விதப் பணவருவாயை எதிர்பார்க்காமலும்; உணவு உடை, கல்வி பொழுதுபோக்கு போன்ற தனது தேவைகளுக்காக எவ்வித அக்கறை காட்டாமலும் குடும்பத் துக்காகவே தனது உழைப்பை ஈடுபடுத்துகின்ற அல்லது அங்கீகரிக்கப்பட்ட உலக தரத்திற்கேற்ப உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் தகுதியாவதற்கு முன்னரே குடும்பத்திற்காக சிறுவர் உழைப்பில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். சர்வதேச*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பு நெறிக் கோவைக்கேற்ப 14 வயதுக்குட்பட்டவர்களை விவசாய உற்பத்தி நடவடிக்கைகளுக்காகவும், 16 வயதுக் குட்பட்டவர்களை தொழிற்றுறை நடவடிக்கைகளுக்காகவும் ஈடுபடுத்தக் கூடாது. இந்நெறி மீறப்படுகிறது'. [4]

**கிரகிக்கும் பயில்முறை:**

மேலுள்ள வாசகப் பகுதியைப் படிக்கும்போது அல்லது கேட்கும்போது கிரகிக்கும் மெய்க்கருத்தினைக் கண்டறிய இரண்டு சுட்டும் பொருள்கள் அல்லது கருத்துகள் முதலில் கிரகிக்கப்பட வேண்டும்.

1. இந்த வாசகப் பகுதி விபரிக்கும் எடுபொருள்.
2. இந்த வாசகப் பகுதி விபரிக்கும் குறிக்கோள்.

எடுபொருள் — இந்த வாசகப் பகுதி குறிக்கும் எடு பொருள் யாது?

சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டு வருத்தப்படுகிறார்கள்.

குறிக்கோள் — இந்த வாசகப் பகுதியில் காணப்படும் குறிக்கோள் யாது?

சிறுவர்களின் உளமும் உடலும் பாதிக்கப் படுகிறது.

ஒரு வாசகப் பகுதியின் எடுபொருளும், குறிக்கோளும் கண்டறியப்பட்டால், அந்த வாசகப் பகுதி சுட்டுகின்ற மெய்க்கருத்தைக் கிரகிப்பதில் சிரமமில்லை.

''சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டு வருத்தப்படு கிறார்கள். அதனால் சிறுவர்களின் உளமும், உடலும் பாதிக் கப்படுகிறது.'' இந்த வாசகப்பகுதியில் சிறுவர்களின் உழைப்புச் சுரண்டல் பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால் கிரகிக்கத்தக்க மெய்க்கருத்து — ''சிறுவர் உழைப்புச் சுரண்டல்'' என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.2. பயிற்சி:

பின்வரும் உரைப்பகுதியைக் கவனமாக வாசிக்க: அப் பகுதியில் அடங்கியுள்ள கருத்தை ஒரு வாக்கியத்தில் இயன்ற வரை சுருக்கமாகக் கூறுக:

*''அமைச்சின் உத்தியோகத்தர் ஒவ்வொருவரினதும் உளப்போக்கு இயன்றளவில் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவும், தணிவு நாடி வருவோருக்கு அதனையளிக்கவும் முயல்வதாக அமைதல் வேண்டும். சில சமயங்களில் உதவி வேண்டுவோரின் கோரிக்கையை மறுத்துவிடுவதும், ''இல்லை'' என்று சொல்வதும் உத்தியோகத்தர்க்கு வெகு சுலபமான வழிகளாகத் தோன்றலாம். ஆயினும் இயன்றவிடமெல்லாம், சட்ட முறையில் இடமளிக்க வல்லதும், நிதி நோக்கில் சாத்தியமுடையதுமான வழிகளைக் கண்டு, வேண்டுகோளுக்குடன்பாடான விடையளிக்க உத்தியோகத்தர் முயலுதல் வேண்டும்.''* [5]

இந்த வாசகப் பகுதியிலிருந்து கிரகிக்கும் மெய்க் கருத்து:

எடுபொருள் — பொதுமக்கள் தங்கள் பிரச்சினைகளை உத்தியோகத்தர்களிடங் கூறி, தீர்வும் அமைதியும் (தணிவு) பெற வருகிறார்கள்.

குறிக்கோள் — அவ்வாறு வரும் பொதுமக்களின் பிரச்சினைகளை இரக்கத்தோடும் பொறுப்புணர்வோடும் அணுகி, விடையளிக்க முயல வேண்டும்.

இவற்றிலிருந்து பெறப்படும் மெய்க்கருத்து இதுவாகும்: ''உத்தியோகத்தர் ஒழுக்கநெறி.''

## 2.3. பயிற்சி:

*''உலகப் பொருளாதாரம் ஒரு நெருக்கடியில் ஆழ்ந்துள்ளது. பணக்கார நாடுகளின் தலைவர்கள் வில்லியம்ஸ் பார்க்கிலோ அல்லது வறிய நாடுகளின் தலைவர்கள் புது*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டில்லியிலோ அல்லது இரு நாட்டுக் குழுக்களின் தலைவர்கள் பெல்கிரேட்டிலோ அண்மையில் நடாத்திய உச்சி மகாநாடு களால் நிலைமையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. வில்லியம்ஸ் பார்க்கில் கூடிய ஏழு பணக்கார நாடுகளின் பிரதிநிதிகள் வறிய உலகின் பிரச்சினைகளைப்பற்றிச் சற்றும் சிந்திக்கவில்லை. மூன்றும் உலகின் கடன் பழுவைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றோ அல்லது உல களாவிய முறையில் எவ்வகையான பேச்சுவார்த்தைகளும் நடத்தப்படுமென்றோ எத்தகைய யோசனைகளும் வெளியிடப் படவில்லை. உலகளாவிய பொருளாதாரப் பிரச்சினைகளை வறிய உலகம் நோக்கும் அதே கண்ணோட்டத்துடன் நோக்கப் பணக்கார உலகினால் முடியவில்லை." [6]

இந்த வாசகப்பகுதியின் எடுபொருள்:- 'வறிய நாடு களின் பொருளாதார அபிவிருத்திக்குரிய நடவடிக்கைகளை உச்சிமகாநாடுகள் எடுக்கவில்லை' என்பதாகும்.

இந்த வாசகப்பகுதியின் குறிக்கோள்: 'பணக்கார நாடுகளின் பாராமுகத்தினாலும் அலட்சியத்தினாலும் உல களாவிய பொருளாதாரப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன'

எனவே கிரகிக்கும் மெய்க்கருத்து –

"வறியநாடுகளின் பொருளாதார மந்தம்"

## 2.4. பயிற்சி:

"பொதுமக்களுடன் பேசும்போது அல்லது அவர்களுக்கு எழுதும்போது, பொதுநல உறவு உளப்போக்கினைக் கைக் கொள்ளல் மிக அவசியமென்பதை நினைவிற்கொள்க. பணி வும் செயல் வேகமும் இன்றியமையாதன. வேண்டுகோள் ஒன்றை மறுக்கநேரும்போதும், மறுப்பிற்குரிய காரணங் களைக் காட்டுமுகமாய், ஏற்புடைய ஆதாரச் செய்திகள் எடுத்து நோக்கப்பெற்றனவென்றும், பிரச்சினைக்குத் தீர்வு காண அமைச்சு முயன்றதெனவும் விளக்கி, பண்பார் முறை யில் மறுப்பினைத் தெரிவிக்க வேண்டும். கடிதங்களுக்குப் பதில் வரையுங்காலை, நறுக்குத் தெறிப்பான நயமற்ற அதி காரத் தொனிபடைத்த சொற்களைத் தவிர்க்க. விடைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இயன்றளவு சுருக்கமாக அமைதல் வேண்டுமெனும், விடையினைப் பெறுவார்க்கு, அவரின் முறையீடுகள் துருவி நோக்கப்பெற்றன என்ற உணர்வு தோன்றும் வகையில் அதன் விடயதானம் அமைதல் வேண்டும்.''* 7

இந்த வாசகப்பகுதியின் எடுபொருள்:- 'அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளும் போது, அவர்களின் முறையீடுகள் சரிவரப் பரிசிலனை செய்யப்பட்டு முடிவெடுக்கப்பட்டிருக்கின்றன என்பதனை உணர்த்த வேண்டும்.'

இப்பந்தியின் குறிக்கோள் - 'அரச உத்தியோகத்தர்கள் பொதுமக்களுடன் தொடர்புகொள்ளும்போது மிக்க பண்புடனும் பொறுப்புடனும் நடந்துகொள்ள வேண்டும்.'

எனவே, இந்த வாசகப்பகுதியின் கிரகிக்கத்தக்க மெய்க் கருத்து:

''கருமத்தொடர்பு முறை.''

## 2.5. பயிற்சி:

*''மனித நடத்தையே விபரிக்கும் கணிப்பீடுகள், முக்கியமானவையாகவும் போற்றத்தக்க முயற்சிகளாகவும் இருந்த போதும், எமது நாகரிகத்தைப் பூரணமாக விளங்கிக்கொள்வதற்கு அவை தம்மளவில் போதியனவல்ல. சமூகமென்பது* ஒழுங்கமைப்பற்ற ஒரு முழுமையாகும். *அது பற்றிய உண்மைகளைத் திரட்டுவதால் மட்டும் அதனை முற்றாக விளங்கிக் கொள்ள முடியாது.''*

**வினாக்கள்:**

(1) மேலுள்ள உரைப்பகுதியைக் கவனமாக வாசிக்க. அப்பகுதியில் அடங்கியுள்ள பிரதான கருத்தை ஒரு வாக்கியத்தில் இயன்றவரை சுருக்கமாகக் கூறுக,

(2) தடித்த எழுத்துப் பகுதியை உமது சொந்தச் சொற்களில் மீளக் கூறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைகள்:

(1) மனித நாகரிகம்

(2) சமூகம் என்பது தனிமனிதனல்லன். நான்கு ஐந்து மனிதர்கள் இணைந்த குழுவுமல்ல. பல்வேறு குடும்பங்களினதும் இணைப்பே சமூகமாகும். அந்த இணைப்பில் பல்வேறு தீர்க்கமான சட்ட திட்டங்கள், ஒழுக்கங்கள், பழக்க வழக்கங்கள் கைக்கொள்ளப்படும். ஒரு ஒழுங்குக் குட்பட்ட அமைப்பு இருக்கும். இவை அனைத்தும் ஒருங்கிணைந்து ஒரு முழுமையாயிருக்கும்.

## 2.6. பயிற்சி:

''சனத்தொகைப் பெருக்கம் சூழல் மீதும் பாதகமான முறையிலே தாக்கம் விளைவிக்கின்றது. பயிர்ச்செய்கைக் காகக் காடுகள் அழிக்கப்படுகின்றன. வீடமைத்தல், தளவாடங்கள் செய்தல் முதலானவற்றிற்கு வேண்டிய மரங்களைப் பெறுவதற்கும் எரி பொருளாக விறகைப் பெறுவதற்கும் காடுகளை அதிகமாக வெட்டுதல் அண்மைக் காலத்தில் அதிகரித்து வந்துள்ளது அத்தோடு மண்ணை வளம் படுத்துவதற்குப் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. காடுகள் அழிவதனால் நாடுகளிலே மண்ணரிப்பு ஏற்பட்டு பெரும் நிலப்பகுதிகள் வளமற்றுப்போகின்றன. ஆழமான கால்வாய்களும் உருவாகின்றன. மண்ணரிப்புக் காரணமாகக் கோடிக்கணக்கான பணம் செலவு செய்து அமைக்கப்படும் நீர்த்தேக்கங்களிலும் நீர்ப்பாசனவேலைகளிலும் மண் நிரம்பி விடக்கூடிய அபாயம் உண்டு. இதனால் நீர்ப்பிரச்சினை மட்டுமன்றி வெள்ள அபாயமும் ஏற்பட இடமுண்டு.'' [8]

வினாக்கள்:

(1) மேலுள்ள உரைப்பகுதியைக் கவனமாக வாசிக்க. அப்பகுதியில் அடங்கியுள்ள கருத்தை ஒரு வாக்கியத்தில் சுருக்கமாகக் கூறுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) தடித்த எழுத்துப் பகுதியை உமது சொந்தச் சொற்களில் மீளக் கூறுக.

(விடைகள் இறுதியில் தரப்பட்டுள்ளன)

## 2.7. பயிற்சி:

பின்வரும் பந்திகளைக் கவனமாக வாசிக்க.

(1) ஒவ்வொரு பந்தியிலும் அடங்கியுள்ள பிரதான கருத்தை இயன்றவரை சுருக்கமாக ஒரு வாக்கியத்திற் கூறுக.

(2) தடித்த எழுத்துச் சொற்றொடர்களை விளக்குக.

(அ) உலக அமைதிக் காவலர் ஒருவர் இல்லாவிடத்து, அணுவானது அரசாங்கங்களைத் தனது ஆற்றலுக்கு மதிப்பச்சம் கொள்ளச் செய்து வைத்திருக்கின்றது. முன்னென்றுமில்லாத அடக்கத்துடனும் அவதானமான பகுத்தறிவுடனும் தம்மை நடத்திக்கொள்வதற்கு அரசாங்கங்களைக் கட்டாயப்படுத்துவதன் மூலம், நிலையுறுதியற்ற ஓர் அமைதியையாயினும் உண்டாக்கியுள்ள ஒரு **பொறிமுறையைச்** செயலற்றதாக்க முயலும்போது, நாடுகளின் படை வலிமையைக் குறைக்கத் திட்டமிடுவோர் சாலவும் விழிப்பாக இருத்தல் வேண்டும். [9]

(ஆ) எமது தேவைகளுக்கேற்ப சமயமானது சமூகம், ஆன்மிகம் என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படும். சமயத்தின் சமூக நோக்கானது, ஒரு வரலாற்றுக்கால கட்டத்துக்கு இன்றியமையாதவையென சமயத்தின் முக்கிய நிறுவகரால் நிறுவப்பட்ட வழக்கங்கள், சடங்குகள் ஆகியவற்றுடன் தொடர்புடையதாயிருக்கும் அல்லது காலப்போக்கில் பெரும்பாலும் தேவையின்றி வந்தடைந்த வழக்கங்களுடன் தொடர்புடையதாயிருக்கும். ஆன்மிக நோக்கானது எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் காலங்கடந்ததும் எல்லாச் சமயத்திற்கும் பொதுவானதும், ஒவ்வொரு புதிய நிறுவகராலும் ஞான அறிவின் **மையக் கருத்தென** திரும்பவும் உணர்த்தப்பட வேண்டியதும் ஆன சமயத்தின் உட்பொருளாய ஒழுக்கம், ஆன்மிகம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது. [10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) அதிகாரத்திலுள்ள கட்சியின் இலட்சியங்களை எய்துவதற்கு எல்லாப் பகுதிகளும் இயலுமானவரை பூரணமாக வினையாற்றத்தக்க நிருவாக உபகரணமொன்றை உருவாக்கக்கூடும் என்பதே அரசியற் சார்புள்ள நியமனங்கள் தொடர்பாகக் கூறப்படும் பிரதான நியாயமாகும். ஒருவரது சொந்தக்கட்சியைச் சேர்ந்தவர்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புவது, இயல்பாகவே இந்த வகையான நிருவாக வினைத்திறமைக்கு உத்தரவாதமளிக்கின்றது.[11]

## 2.8. பயிற்சி:

பின்வரும் பந்திகளைக் கவனமாக வாசிக்க.

(1) ஒவ்வொரு பகுதியிலும் அடங்கியுள்ள பிரதான கருத்தை ஒரு வாக்கியத்தில் இயன்றவரை சுருக்கமாகக் கூறுக.

(2) தடித்த எழுத்துப் பகுதிகளை உமது சொந்தச் சொற்களில் மீளக்கூறுக.

(அ) அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளிலே நிலவும் பாதகமான பொருளாதார நிலையை மாற்றி, அந்நாடுகளிலே ஓர் உயர்ந்த பொருளாதார நிலையை உருவாக்குவதற்காகவும் உலகிலே ஒப்புரவான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காகவும் உலகிலொரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இம்மாற்றத்தை உண்டாக்குதல் தொடர்பான காரணிகளில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பலமும் அவற்றின் இயலாற்றல்களும் இவை பற்றிய அறிவும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் இயலாமைகளும், இவை பற்றிய அறிவும் சிலவாகும். **வர்த்தகப் பொருள்கள் மீது அபிவிருத்தியடைந்தநாடுகள் கொண்டுள்ள ஆதிக்கமும்** மூலதன வளத்தின் மீதும், கடன்கொடை – கொடாமை ஆகியவற்றின் மீதும் அந்நாடுகள் காட்டும் சக்தியும், அவற்றின் கலாச்சார, தொழில் நுட்ப, போர்ப்பலமும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஏனைய காரணிகளாகும்.[12]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) வரலாறு பற்றிய முன்மொழிவுகள் எப்போதும் சூழலமைப்புச் சார்ந்தவையே. அவை எத்தகைய பொது மெய்மைகளை ஆதாரமாகக் கொண்டவையாயினும் குறிப்பிட்ட காலங்களிலும் குறிப்பிட்ட இடங்களிலும் நிலவும் நிலைமைகளையே அவை எடுத்துக்கூறுகின்றன. இந்தச் சூழலமைவுகள் ஒருபோதும் ஒருங்கொத்திருப்பதில்லை என்பதை நாம் நிரம்பக் காணம். ஒரு புரட்சியோ, போராட்டமோ போன்ற ஒரே வகைக்குரிய வெவ்வேறு நிகழ்ச்சித் தொடைகளை ஆராய்வதென்பது, ஒன்றுக்கொன்று சமமாக்கப்பட முடியாத வெவ்வேறு சூழ்நிலைகளிற் கருத்துச் செலுத்துவதாகவே அமையும்.[13]

(இ) வெப்ப மண்டல மழைக் காடுகளை வெட்டுவதும் அழிப்பதுமாகிய அண்மைக் காலத்து நிலை மேலும் தொடர்ந்து கொண்டே போகுமாஞல் இதுவரை பெயர் சூட்டப்படாத பெரும்பான்மையான தாவரங்களும் விலங்குகளும் ஆயிரக்கணக்கில், ஏன் நூருயிரக்கணக்கில் அழிந்தொழிந்துவிடுமெனச் சூழலியலார் எச்சரிக்கை செய்கின்றனர். முன்னெக்காலத்திலும் நிகழ்ந்திராத அத்தகைய உயிரின நாசத்தின் விளைவாக ஏற்படக்கூடிய சூழலின் முழுமையான தாக்கத்தை முன்கூட்டியே உணர்ந்துகொள்ள முடியாதிருக்கின்றது. ஆனுல் அது நிச்சயமாக திரும்பவும் மாற்றம் பெற முடியாதவகையில் உயிரினங்களின் படிமுறை வளர்ச்சியில் உருச்சிதைவை உண்டு பண்ணிவிடும். உயிரினச் சத்துக்கள் நிறைந்த வெப்பமண்டலப் பகுதிகள் சிலவற்றைத் தெரிவு செய்து அவற்றை இயற்கைச் சூழலிலேயே பாதுகாக்க வேண்டுமென்பது இருபதாம் நூற்ருண்டின் பிற்பகுதியில் தோன்றிய மிக முக்கியமாகப் பேணிப் பாதுகாக்க வேண்டிய ஆய்வு அடிப்படைப் பொருள்களுள் ஒன்ருகக் கருதப்படுகிறது.[14]

## 2.9. பயிற்சி:

பின்வரும் உரைப்பகுதிகளை அவதானமாக வாசிக்க.

(1) ஒவ்வொரு பகுதியினதும் முக்கிய கருத்தினை ஒரு வாசகத்தில் மிகச் சுருக்கமாக எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) தடித்த எழுத்துச் சொற்றொடர்களை உமது சொற்களில் மீள விபரிக்க.

(அ) மனிதனுக்கும் சூழலுக்குமிடையேயுள்ள தொடர்பினைச் சாதாரணமாக நுணுகி ஆராய்வதாயின் அது தொழில் நுட்பத்தின் தாக்கத்தினை மதிப்பிடுதலை உள்ளடக்கியதாயிருக்கும். உண்மையில் உலகின் நாலு பக்கங்களிலும் மேற்கொள்ளப்பட்ட ஒப்பியலாய்வுகள் காட்டுவது யாதெனில் தொழில் நுட்ப உபயோகம் உலகின் பல்வேறு பாகங்களில் இடத்திற்கிடம் சமூக பொருளாதார அமைப்புக்களுக்கும் பண்பாடுகளுக்கும் தக பெரிதும் வேறுபட்டுள்ளது என்பதாகும். **நிலத்தையும் மனித தொழில்களையும் ஒழுங்கு நெறிப்படுத்துவதன்** மூலம் மனிதனுக்கும் சூழலுக்குமுள்ள தொடர்பு எத்தகையது என்பதை நுணுகி ஆய்வது மிகமுக்கியமானதாகலாம். தனி நபர்களும் மனித குழுக்களும் தாம் சிறந்த வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ளும் பொருட்டுத் தமது சுற்றுடலைச் சீர்செய்ய எப்போதும் முயற்சி செய்து வந்தனர். [15]

(ஆ) மனிதன் மரபு வழிப்பெறும் உயிர்மத்தின் இணை மரபுக் கீற்றுக்கள் மிகப் பழைய காலத்திலிருந்தே பெற்றோர் தலைமுறையினர் வழியாக ஒப்புவிக்கப்படுகின்றன. மனிதன் வளர வளர அவன் மனப்பண்புகளும் உருவ அமைப்புகளும் அதற்குத் தக விருத்தியடைகின்றன. ஒரு குழந்தையானது தன் மூதாதையருள் மனக்கொந்தளிப்புடைய ஒரு நபரிடமிருந்து உயிர்மத்தின் இணைமரபுக்கீற்று ஒன்றினை மரபு வழிப்பெற்றுக்கொள்ளலாம். கருக்கொள்ளுங் காலத்தில் மரபுவழிப் பண்பியல் சார்ந்த அணுக்கள் இணைந்து ஒன்று சேருந் தன்மையையொட்டியே இது தீர்மானிக்கப்படுகின்றது. புணர்ச்சியின்போது நிகழும் இப்போராட்டத்தில் உயிர்மத்தின் இணைமரபுக் கீற்றுக்கள் சில **அழிந்துவிடுகின்றன. சில விலக்கப்படுகின்றன. மற்றுஞ் சில கூடி ஒன்றுகச் சேர்கின்றன.** மனக்கொந்தளிப்புடைய தன் மூதாதையரிடமிருந்து உயிர்மத்தின் இணைமரபுக்கீற்றுக்களை மரபு வழிப் பெற்றுக்கொள்ளும் குழந்தையில் உள்ளீடாக மறைந்திருக்

கும் மணக்கொந்தளிப்புடைய பண்பானது அக்குழந்தை வளர வளர உறங்கிக்கிடக்கின்றது. ஆனால் சில வேளைகளில் அப்பண்பு விரைவாக வெளிப்படுத்தப்படலாம். அப்போது அவன் பயங்கரமாகவும் கொடூரமாகவும் செயலாற்றுகிறான். [16]

(இ) வீடுகளைப் பாவிக்கும் குடும்பத்தவர்கள் மையமான ஒரு நிலைமையை அடைகின்றனர். எமது உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் விவசாயியைப்போன்ற நிலைமையை இது ஒத்ததாகும். தமது உறைவிடம் வசிப்பிடம் குறித்து வீடுகளையமைக்கும் பயன்பாட்டுக் குடும்பத்தவரே பரந்த அளவிலான தீர்மானங்களை எடுப்பர். வீடுகளைப் பாவிக்கப்போகின்றவர்களே நாட்டில் வீடமைப்பு குடியேற்ற அபிவிருத்தித் திட்டங்களில் பிரதம பாத்திரங்களாக மாறுகின்றனர். [17]

## 2.10. பயிற்சி:

பின்வரும் உரைப்பகுதிகளைக் கவனமாக வாசிக்க.

(1) ஒவ்வொரு பந்தியினதும் முக்கிய கருத்தினை ஒரு வாக்கியத்தில் மிகச் சுருக்கமாக எழுதுக.

(2) தடித்த எழுத்துப் பகுதிகளை உமது சொந்தச் சொற்களில் மீளக் கூறுக.

(அ) பத்து இலட்சம் ஆண்டுகள் கடந்த மானுட இதிகாசத்தினை நோக்குகையில் ஓராண்டென்பது ஓர் குறுகிய காலமாகும். எனினும் விஞ்ஞான, தொழில் நுட்ப விருத்தியில் முன்னேறும் இவ்விருபதாம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் ஓராண்டென்பதனை குறுகிய காலமாகக் கணிக்க எவ்வாறெனினும் இயலாது. குறிப்பாகப் பணவீக்கம் உலகளாவியுள்ள இக்காலத்தில் இலங்கை போன்ற **அபிவிருத்தியடையும் நாட்டில் ஆழப்பதிந்துள்ள பாரதூரமான பொருளாதார, சமூகப்பிரச்சினைகளை** நோக்குகையில் ஓராண்டென்பது எமக்குப் பெரும் பளுமிகு பணிநிறைந்த காலகட்டமாகும். [18]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) நம் இளைஞர்கள் பொறுமையிழந்து, வெறுமையில் வாழ எத்தனிக்கிறார்கள். சமூகம் இயந்திரமயமாக மாறிக்கொண்டு போகின்றது. தொழில் நுட்ப ரீதியில் மனித வாழ்க்கை அமைக்கப்படுகின்றது. வாழ்க்கை இயற்கையைவிட்டுச் செயற்கையாகிவிட்டது. இந்தச் செயற்கை வாழ்க்கையின் பிடியில் இழைத்திருக்கும் இளைஞர்கள் பாலியலில் தம்முடைய சக்தியையும் முயற்சியையும் திசை திருப்புகிறார்கள். ஆண்களும் சரி பெண்களும் சரி பாலியல் புரட்சியில் ஈடுபட்டு **வெறுமையான தனிமைக்கும் விரக்திக்கும் தள்ளப்பட்டு விடுகிறார்கள்.** [19]

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம்: மூன்று

# சுருக்கக் கிரகித்தல் / கிரகிக்கும் சுருக்கக் கருத்து

கிரகித்தலின் இரண்டாம் அடிப்படை, ஒரு நீண்ட உரையை அல்லது வாசகத்தைச் சுருக்கக் கிரகித்தலாகும். இதனைக் கிரகிக்கும் சுருக்கக் கருத்தெனலாம். சொற்ப வற்றிலிருந்தும் படிப்பவற்றிலிருந்தும் மெய்க்கருத்தினைச் சுருக்கமாகப் புரிந்து கொள்வது சிறந்தொரு நிர்வாகிக்கு இருக்கவேண்டிய தகைமையாகும். ஒரு வாசகப் பகுதியைப் படிக்கும்போது அல்லது கேட்கும்போது அர்த்தம் இரண்டாக இருக்க முடியாது; ஒன்றுகத்தான் இருக்கமுடியும்.

இதனை ஒரு உதாரணத்தின் மூலம் பார்ப்போம்.

உதவி அரசாங்க அதிபர் ஒருவரிடம் ஒரு விவசாயி முறைப்படுகின்றுன்:

*"இந்த முறையும் பிழைக்கப்போகின்றது. பயிர்கள் கதிர் தள்ளிக் கிடக்கின்றன. முன்னுல இருப்பவன்கள் விடுகிருன்கள் இல்லே. ராப்பகலா அவங்களே அடாத்தாகப் பாய்ச்சுருன்கள். இன்னமும் ரெண்டு நாளில தண்ணியில்லாவிட்டால், எல்லாம் முடிஞ்சிடும். ஐஞ்சு பிள்ளையளும் நானும் மனிசியும் பிச்சைதான் எடுக்கவேணும். இருந்த நகை நட்டு எல்லாத்தையும் அடைவு வைச்சுத்தான் இந்தவாட்டி செய்தன். அதுவும் கதிரும் குடலையுமா போகப்போகுது. ஐயா, இதையொருக்கா நீங்க பார்க்க வேணும். இதைக் கவனிக்காவிட்டால் நாங்க நஞ்சுதான் குடிப்பம்."*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த விவசாயி செய்யும் முறைப்பாடு என்ன?

''எனது வயலுக்கு நீர்ப்பாசன நீர் கிடைக்கவில்லை. முன் வயல்காரர் நீர்ப்பாசன நீரை மறித்துத் தொடர்ந்து பாய்ச்சுகிறார்கள். அதனால் நீர் கிடைக்காமல் எனது வயல் அழியப்போகின்றது.'' எனவே விவசாயியின் நீண்ட முறைப் பாட்டின் மெய்மையைச் சுருக்கக் கிரகித்தல் இதுவாகும்.

## 3.1. பயிற்சி:

பின்வரும் உரைப்பகுதியை 70க்கு மேற்படாத உமது சொற்களில் சுருக்கி எழுதுக. அதற்குப் பொருத்தமான தலைப்புந் தருக.

''இற்றைக்கால மனிதனுக்குப் பசியைத் தணித்துக் கொள்வதற்கு உணவும், மானத்தைக் காத்துக்கொள்வதற்கு உடையும், வெயிலிலிருந்தும் மழையிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு உறையுளும் இருந்தால் மட்டும் போதாது. அபிவிருத்தியடைந்த நாட்டு மக்கள் அனுபவிக்கும் வாழ்க் கைத் தரத்தையடைவதற்கு உலகிலுள்ள ஏனைய ஒவ்வொரு நாடும் முயற்சி செய்கின்றது. நவீன வசதிகளுள்ள வீடுகள், நானாவித ஆடைகள், மக்கள் தொடர்புச் சாதனங்கள் ஆகியனவற்றிற்கும், போக்குவரத்துத் துறையில் ஏற்பட் டுள்ள முன்னேற்றம் காரணமாக வாகனங்கள், பெருந் தெருக்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் என்பன வற்றிற்குமான தேவை மக்கள் தொகைப் பெருக்கத்தோடு அதிகரிக்கின்றது. இவ்வசதிகளை வழங்குவதற்குத் தேவை யான பொருள்களை உற்பத்தி செய்ய, பலவித கைத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். அந்தக் கைத்தொழில் களுக்குத் தேவைப்படும் வளங்களைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் பிரச்சினைகளை உலக மக்கள் எதிர்நோக்க வேண்டி யிருக்கின்றது. உணவு உற்பத்தியைப் பெருக்கிக்கொள்ள, பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ளலாம். எனினும் குறைந்து வரும் வளங்களை அவை முன்னர் இருந்தவாறு மீண்டும் உருவாக்கல் இயலாத காரியமாகும். உலகின் பல பகுதிகளில் பரந்துகிடக்கும் நிலக்கரி வயல்கள் உருவாகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்குப் பல இலட்சக்கணக்கான ஆண்டுகள் சென்றிருக்கலாம். ஏதாவதொரு நிலக்கரி வயலிலேயுள்ள நிலக்கரி முழுவதையும் அகழ்ந்தெடுத்தால் அந்தவிடத்தில் அந்த வளம் அற்றுப்போய்விடும். இவ்வாறே நிலக்கரி, இரும்புத்தாது, பெற்ரோலியம், செம்பு, வெள்ளீயம் போன்ற இயற்கையின் கொடைகளை நாம் கட்டுப்பாடின்றிப் பயன்படுத்தினல், நெடுங்காலம் செல்லுமுன்னர் அந்த வளங்கள் உலக மக்களுக்குக் கிடைக்காமற் போகலாம். [20]

சுருக்கக் கிரகித்தலுக்கும் வழமைபோன்று இரு விடயங்களை முதலில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளல் அவசியமானதாகும்.

ஒன்று — இந்த வாசகப் பந்தியிலுள்ள எடுபொருள் யாவை?

இரண்டு — இந்த வாசகப் பந்தி சுட்டும் குறிக்கோள் யாது?

**இந்தப் பந்தியிலுள்ள எடுபொருள் இவைதாம்:**

"மக்களுக்கு உணவு, உடை, உறையுள் என்பனவற்றுடன் இன்று வேறும் பல அத்தியாவசியப் பொருட்கள் தேவைப்படுகின்றன. குடிப்பெருக்கத்தோடு இத்தேவைகளின் தேவைகளும் அதிகரித்து வருகின்றன. இவ்வசதிகளைப் பெறுவதற்குக் கைத்தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். கைத்தொழில் உற்பத்தி இயற்கை வளங்களில் தங்கியிருக்கின்றது. நிலக்கரி, பெற்ரோலியம், செம்பு, வெள்ளீயம் என்பன மீளா வளங்களாகும். ஒரு தடவை பயன்படுத்தில் அவை மீண்டும் மக்களுக்குக்கிடையா. ஆகவே கட்டுப்பாட்டுடன் வளங்களைப் பயன்கொள்ள வேண்டும்."

அதன் சுருக்கம் இதுதான். இதுவே கிரகிக்கும் சுருக்கக் கருத்தாகும்.

**முன் தரப்பட்ட வாசகப் பந்தி சுட்டும் குறிக்கோள் யாது?**

வளப் பாதுகாப்பு

இதுவே அந்தப் பந்திக்குரிய பொருத்தமாண தலைப்புமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.2. பயிற்சி:

பின்வரும் உரைப்பகுதியை 50க்கு மேற்படாத உமது சொற்களில் சுருக்கியெழுதுக. அதற்குப் பொருத்தமான தலைப்புந் தருக.

''நாகரிகம் தோன்றிய காலந்தொட்டு அதிகாரத்தைப் பற்றி ஆராய்வதிலும் அதிகாரத்தைச் செயற்படுத்துவதிலும் மனிதன் அக்கறைகாட்டி வந்துள்ளான். பண்டைக் கால இந்தியரும் சீனரும் கிரேக்கரும் உரோமரும் தத்தமக்குரிய வழிமுறைகளில் ஆள்வோருக்கும் குடிகளுக்குமிடையேயுள்ள உறவுகளின் தன்மை குறித்தும் அரசியல் அமையத்தின் அடிப்படை குறித்தும் ஆழ்ந்தாராய்ந்துள்ளனர் அவர்களும் அவர்களுக்குப்பின் வந்தவர்களும் அரசியல் அதிகாரத்திற்கு அடிப்படையாக அனைத்து நாடுகளுக்கும் பொருந்தத்தக்கன என்று தாம் கருதிய சில கோட்பாடுகளை உருவாக்க முயன்றனர். அக் கோட்பாடுகள் பெரும்பாலும் ஒழுக்கவியலையோ, மெய்யியலையோ, மதவியலையோ சார்ந்தனவாக இருந்தன. இத்தகைய மரபுமுறையான ஆராய்ச்சியும் சிந்தனையும் இருந்தபோதிலும் அரசியல் பயிலுந் தற்கால மாணவன் அடிப்படைப் பிரச்சினைகள் பலவற்றை எதிர்நோக்க வேண்டியவனாக இருக்கின்றான். அரசியலின் உள்ளடக்கம் பற்றித் தானும் கருத்தொருமை காணப்படவில்லை. இவ்விடயத்தை ஆய்வதற்கு மேற்கொள்ளப்படும் முறைகளும் அணுகுவதற்குப் பின்பற்றப்படும் வழிகளும் கருத்து மாறுபாட்டிற்குரியவை. அனைவராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க சொல்லாட்சி எதுவும் கிடையாது. மூலச் சொற்றொடர்கள், கருத்துக்கள், கோட்பாடுகள் ஆகியவை பல்வேறு அரசியல் அறிஞர்களாலே அடிப்படையில் வேறுபட்ட வழிகளில் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அரசியல் பாடம் ஒரு கலையேயன்றி விஞ்ஞானம் அன்று எனவும் சொல்லப்படுகின்றது. இத்தகைய அல்லது வெற்றையொத்த பிரச்சினைகளை அரசியல் அறிஞர்கள் மாத்திரமன்றி சமூக அறிஞர்கள் அனைவருமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்நோக்க வேண்டியவராய் உளர். மனித அமையங்கள், மனித நடத்தை, மனித உறவுகள் என்பனபற்றிய ஆய்வு-குறிப்பாக ஒருவரோ ஒரு குழுவினரோ பிறர்மீது ஆதிக்கம் செலுத்துதல் பற்றிய ஆய்வு - சிக்கலானதாயும் குழப்பமான தாயும் இருக்குமென்பது நிச்சயம். இப்பிரச்சினையை விஞ்ஞான மனப்பாங்கோடு அணுகுதல் வேண்டும்.[31]

**இந்தப் பந்தியிலுள்ள எடுபொருள் / கிரகித்தலின் சுருக்கக் கருத்து யாது?**

"ஆள்வோருக்கும் குடிகளுக்குமிடையேயுள்ள உறவு அதிகார நிலைநாட்டலாகவே இருந்து வந்துள்ளது பண்டைய இந்தியர், கிரேக்கர், சீனர், உரோமர் என் போர் அதிகாரத்தைப்பற்றி ஆராய்வதிலும் செயற்படுத்து வதிலும் அக்கறைகாட்டி வந்துள்ளனர். அரசியல் அதிகாரம் குறித்த கோட்பாடுகள் பல இருக்கின்ற போதிலும் அவை அனைத்து நாடுகளுக்கும் பொருந்துவதாகவில்லை. இவை மரபுமுறையான ஒழுக்கம், மெய்யியல், மதவியல் சார்ந் தனவாகவிருந்தன. அரசியல் அறிஞர்களால் இக்கோட் பாடுகள் விஞ்ஞான பூர்வமாக அணுகப்படாமல் கலா பூர்வமாக அணுகப்பட்டன. மனித அமையங்கள், நடத்தை, உறவுகள் என்பன பொதுவாக சிக்கலானவைதாம். எனவே விஞ்ஞான மனப்பாங்கோடுதான் அணுகவேண்டும்."

இப் பந்தியிலுள்ள குறிக்கோள் யாது?

"அரசியல் அதிகாரம்"

## 3.3 பயிற்சி:

பின்வரும் உரைப்பகுதியை 70க்கு மேற்படாத உமது சொற்களில் சுருக்கியெழுதுக. அதற்குப் பொருத்தமான தலைப்புந் தருக.

கல்வியின் செயற்பாட்டினுலாய முழுமையான விளை வினை எப்போதும் மனதிற் கொள்ள வேண்டும் கல்வியின் சில [illegible]ங்களுக்கு முக்கியத்துவம் அளித்தும் ஏனையவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலட்சியம் செய்தும் அல்லது முற்றாக விலக்கியும் கொடுக்கப்படும் எந்தக் கல்வி முறையும் திருப்திகரமானதெனக் கொள்ள முடியாது. அல்லாவிடின் வளர்ந்துவரும் இளைய தலைமுறையினர் வாழ்க்கைக்கு வேண்டிய வற்றைப் பெருதும் குறைபாடுடையவர்களாயும் வளரலாம். இன்ப வாய்ப்புகள் நிறைந்த இன்றைய சமுதாயத்தில் ஆசையின் நோக்கமும் எல்லையும் இலாபகரமான வாழ்க்கையின் எவ்வளவு பெரும் பங்கைப் பெற முடியுமோ அவ்வளவைப் பெறவேண்டுமென்பதாகையால் தீமைகளை நீக்க உதவும் கல்வியின் செல்வாக்கைப் பெறுவதற்குக் கவனமாகத் திட்டமிடல் வேண்டும். இன்று ஒழுக்க மதிப்புக்கள் பற்றிய உண்மையான உணர்வுகளை மனதிற் பதிய வைப்பதற்கு வற்புறுத்தப்படுகிறது. கோவில்களிலும் தேவாலயங்களிலும் வணக்கம் செலுத்துவதுடன் வகுப்பறைகளில் சமய போதனைக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலமும் சமுதாயத்துடன் பாடசாலைகளை நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்யும் பல்வேறு திட்டங்களின் மூலமும் இது வற்புறுத்தப்படுகிறது. நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதே இன்று கல்வித் திட்டத்தின் வழிகாட்டும் கொள்கையாக ஆக்கப்பட்டுள்ளது. கல்வியானது மனித வர்க்கத்தின் வளர்ச்சி வேகத்துடன் இணைந்து செல்லல் வேண்டும். ஏனெனில் ஆக்கப்படுகின்ற வருங்கால வரலாறு இதுவே. சீராகச் சிந்தித்துச் சிறப்பாகத் திட்டமமைத்து அறிவுத் திறங்கொண்டு செயற்படுத்தப்பட்ட கல்வியின் மூலமே எந்தவொரு நாடும் வருங்காலத்தைப் பற்றிய தன் கனவை நனவாக்க முடியும்.[22]

## 3.4. பயிற்சி :

பின்வரும் உரைப்பகுதியை 80க்கு மேற்படாத உமது சொற்களில் சுருக்கி எழுதுக. அதற்குப் பொருத்தமான தலைப்புத் தருக.

"காப்புறுதி செய்யப்பட்ட பொதிகள் இரு வழி கொண்டு செல்லல் முறை, அஞ்சல் அதிகாரிகளினால் செய்யப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குகளின் பிரகாரம் அஞ்சல் வாக்களிப்பு திருப்திகரமான முறையில் நடைபெறலாயிற்று. அந்தந்தக் கச்சேரிகளில் பொறியிடப்பட்ட பொதிகள் பெருமளவில் 22 அஞ்சல் அலுவலகங்களில் பொறுப்பேற்பதற்கு அவர்கள் தயாராக விருத்தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும், அஞ்சல் அதிகாரிகளுக்கும் இடையில் தெளிவான விளக்கத்தின் மீதான சரியான புள்ளிவிபர அடிப்படையில் ஒழுங்குகள் செய்ய முடிந்தமையால் பிரச்சினைகள் எழவில்லை எனலாம் அப்படி இருந்தும் அத்தாட்சிப் படுத்தும் அலுவலரிடமிருந்து இப்பொதிகள் எவ்வளவு தொகை கிடைக்கக் கூடுமென அறியமுடியாமை அஞ்சல் அலுவலகங்கள் கஷ்டங்களுக்கு முகங் கொடுக்க வேண்டியிருந்தன. இந்தப் பொதிகள் அந்தந்த அரசாங்க அலுவலகங்களுக்கு ஒப்படைக்க வேண்டியிருந்தது. அது பற்றிய நிரல்களில் அவை கிடைத்தனவெனும் குறிப்பைப் பெற்றுக்கொண்டேயாகும். அதே போன்று பொதிகள் திருப்பியனுப்பும்போதும், அவைகள் நிரல்கள் செய்யப்பட்டு பெற்றுக்கொண்டது பற்றி அங்கு குறிப்பிட்டு அவைகள் அத்தாட்சிப் படுத்தும் அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டியிருந்தது. இது சம்பந்தமாக அஞ்சல் மா அதிபரால் விசேஷமான அறிவுரைகள் கொடுக்கப்பட்டுள்ளதுடன் இந்தக் காப்புறுதி செய்யப்பட்ட அஞ்சல்கள் பற்றி நடைமுறைப் படுத்துவதற்கு 1445 அஞ்சல் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுரைகளிலிருந்து இவற்றின் மகத்தான முக்கியத்துவம் பற்றித் தெரிந்துகொள்ள முடிந்தது. தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அஞ்சல் அதிகாரிகளுக்கும் இடையில் மிகவும் நெருங்கிய தொடர்பு இருந்தமையால் இப்பொதிகள் இங்கும் அங்கும் கொண்டு செல்லுஞ் செயல் மிகவும் இலகுவாக நிறைவேற்ற முடிந்தது.[23]

## 3.5. பயிற்சி:

பின்வரும் பந்தியைச் சுருக்கி ஏறக்குறைய 65 சொற்களில் உமது சொந்த மொழிநடையில் எழுதுக. இதற்குப் பொருத்தமான ஒரு தலையங்கமும் தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைபற்றிச் சமூகவியலார் செய்துள்ள ஆய்வுகள், பிரதானமாக, வெவ்வேறு சந்தர்ப்பங்களிலே பல்வேறு குழுக்களால் எத்தகையோர் தலைவராகத் தெரிவு செய்யப் பட்டுள்ளனர் என்பதைக் கருதுகையில் மிகவும் வாய்ப் புடையனவாக இருக்கின்றன. ஆனால் கைத்தொழில் மிக வும் சாதாரணமாகக் காணப்படும் நிலைமையிலே எத்தகைய வர் அக்குழுவின் தலையாய நலனுக்கு ஏற்றவராகவிருப்பார் என்று தீர்மானிப்பதற்கு அவை எமக்கு உதவுவனவல்ல. உளவியலார் தரும் போங்குகளின் பட்டியலும் அதிகம் உதவுவனவல்ல. ''நீதியுணர்வு'', ''பொறுப்பேற்கும் ஆற் றல்'' என்பவை போன்ற பண்புகள் சாலவும் சிக்கலானவை. இவை ஒரு மனிதனிடம் காணப்படும், அல்லது காணப் படாத தனிப்போங்குகளுமல்ல. குறித்த ஒருவருக்கு உள்ளன வும், அவர் செயல் புரியும் எல்லா நிலைமைகளிலும் தோன்றுவனவுமான ''சோம்பல்'', ''நாணம்'', கோழைத் தனம் என்னும் பண்புகள் எளிய தனிப்பண்புகளாகாமை போலவே மேற்சொன்ன பண்புகளுமாம். இன்னலம் வாய்ந்த ஒரு குழுவின் தலைவர் நியாயமான அளவு நுன் மதியுள்ளவராகவும், நியாயமான அளவு நல்ல சமநிலை பேணுபவராகவும், இருத்தல் வேண்டுமென்பது, வெள்ளிடை மலை. அன்றியும் அவர்தம் குழுவினரின் உணர்ச்சிகளை உண ருந்திறனற்ற, குறுகிய, தன்னலங் கருதும் ஆளுமையுடைய வராக இருத்தல் ஆகாது. பிறவாறு கூறுவதானால் அவர் கட்டளைகளையும் அறிவுறுத்தல்களையும் கொடுக்க வல்லவ ராய் இருப்பதோடு மட்டுமன்றி தாம் கொடுக்கும் கட்டளை களிலும் அறிவுறுத்தல்களிலும் தாக்கம் விளைவிக்கும் தமது சூழலிலிருந்து செய்திகளை ஏற்றுக்கொள்ள வல்லவராயும் இருத்தல் வேண்டும். தாழ்ந்த நுண்மதியும், ஒரு பக்கச் சார்பும் தன்னலங்கருதும் மனப்பாங்கும் ஒருவருக்கு இருப் பின், அவை அவரது சூழலிலிருந்து வரும் செய்தியைத் திரிவுபடுத்தி அதனைக்கட்டியாளும் அவரது ஆற்றலைப் பாதிக்கக்கூடுமாதலின், அவர் இன்னலம் வாய்ந்த ஒரு குழுவின் சனநாயகத் தலைவராகவிருக்கத் தகுதியற்றவரா வார். [24]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.6. பயிற்சி:

பின்வரும் பந்தியை 50 சொற்களாக உமது வாக்கியத்தில் சுருக்கி எழுதுக. ஏற்ற தலையங்கமும் தருக.

''வீடுகளை அமைத்துப் பாவிக்கப்போகின்றவர்களுக்கு ஆதரவளிப்பதும் காணி, நிதி போன்றவற்றை வழங்குவதும், நெருக்கடி மிக்க நிலைமைகளில் தலையீடு செய்வதும், தடைகளை இலகுபடுத்துவதும் அவர்களின் செலவு குறித்தும் பலதரப்பட்ட விருப்பு வெறுப்புக்களைப் பற்றி அறிவிப்பதும் ஆகும். ஆகவே அரசாங்கம் ஆதரவை வழங்குவதோடு இலகுபடுத்தும் அமைப்பாகவும் தனிப்பட்ட பாவனையாளர்கள் முகவர்களாகவும் தீர்மானங்கள் எடுப்போராகவும் விளங்குவர். மக்களின் பங்களிப்பானது ஆயிரம் மடங்காக அதிகரிக்கும். அத்தோடு தரமும் முன்னேற்றம் காணும். தங்கள் உறைவிடம் வசிப்பிடத்தைப் பொறுத்தவரை, சமூக மக்கள் முன்பு இல்லாதவாறு பொறுப்பாக இருப்பார்கள். பாரம்பரியமானது மீண்டும் புதிய வரைவிலக்கணம் பெறும். நவீன விஞ்ஞானமானது அவர்களுக்கு வெறுங்கால் போன்றதாகத் தான் இருக்கும். அரசின் தலையீடானது ஆகக் குறைந்த அளவில் இருக்கும். ஆனால் உபயோகம் செய்வோரின் பங்களிப்போ ஆகக் கூடுதலான அளவில் இருக்கும். தீர்மானம் எடுப்போருக்கு உதவுவதற்காக ஆகக்கூடிய ஆதரவும் தகவல்களும் பெற்றுக்கொடுக்கப்படும்.''[26]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம்: நான்கு

# விரிவுக் கிரகித்தல் / கிரகிக்கும் விரிவுக் கருத்து

கிரகித்தலின் மூன்றும் அடிப்படை ஒரு வாக்கியத்தின் அல்லது சொற்றொடரின் விரிவுக் கருத்தைக் கிரகித்தலாகும். இதனைக் கிரகிக்கும் விரிவுக்கருத்து எனலாம். சொல்பவற்றிலிருந்தும் படிப்பவற்றிலிருந்தும் ஒரு வாக்கியத்தின் அல்லது சொற்றொடரின் விரிவான கருத்தினைக் கிரகித்துக் கொள்வது சிறந்ததொரு நிர்வாகிக்கு இருக்க வேண்டிய தகைமையாகும். ஏற்கனவே அத்தியாயம் இரண்டில் கிரகிக்கும் மெய்க்கருத்தோடு, கிரகிக்கும் விரிவுக் கருத்தும் ஆராயப்பட்டுள்ளது. ஒரு பந்தியில் வரும் சொற்றொடரின் விளக்கக்கருத்து என்ன என்பது விளக்கப்பட்டுள்ளது எனினும் இந்த அத்தியாயத்தில் இதற்கான சில உதாரணங்களை ஆராய்வோம்.

### 4.1. பயிற்சி:

பின்வரும் உரைப்பகுதியில், தடித்த எழுத்திலுள்ள சொற்றொடர்களை விளக்குக.

''இங்கிலாந்து தன்வசமுள்ள மூல தனத்தைச் சீரான முறையில் **துணி உற்பத்தியில் ஈடுபடுத்திச் செம்மையான வகையில் உற்பத்தியைப் பெருக்கி, போலாந்து நாட்டிற்கு ஏற்றுமதி செய்து, பதிலுக்கு அவர்களிடமிருந்து தானியத்தை இறக்குமதி செய்வதே மேல்.** ஏனெனில் இங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாந்து நாட்டு வயல்கள் மிகவும் வளம்பெற்றதாகவிருப்பினும், அவற்றைக் கொண்டு உற்பத்தியாகும் தானியத்தின் அடக்கவிலை போலாந்து நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தானியத்தைவிட அதிக விலையுள்ளதாக இருக்கும். இந்த ஒரே காரணத்தால் மூலதனத்தை நிலத்திலிட்டுப் பயனடைவதைவிட துணி உற்பத்தியில் முடக்கி அதிக இலாபம் பெறலாம்.'' 26

**விளக்கம்:**

'அடக்கவிலை' என்பதன் விரிவுக் கருத்து யாது?

'நவீன உலகில் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு பண்ட உற்பத்தியில் மேம்பட்டு விளங்குகின்றன. குறைந்த உற்பத்தி விலையில் சிறிய உற்பத்தியாகத் திகழ்வதால், வேறெந்த நாட்டிலும் அவ்வளவு குறைவான உண்மை அடக்கவிலையில் உற்பத்தி செய்ய இயலாது. இந்த உண்மை அடக்கவிலை ( eal ost) ஏனைய இதர நாட்டின் அடக்கவிலையோடு ஒப்பிட்டால் இதர நாடுகள் அப்பண்டத்தை உற்பத்தி செய்யாது. இந் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யும். உள்நாட்டில் உற்பத்தி செய்வதால் ஏற்படும் நட்டத்தைவிட இறக்குமதிசெய்து இலாபம் பெறக்கூடும் எனலாம்.'

## 4.2. பயிற்சி:

''வறுமையை ஒழிக்கும் விஷயத்தில் இரு பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. ஒன்று வேலையில்லாத் திண்டாட்டம், மற்றது வளர்ந்துவரும் போஷணைக் குறைவுப் பிரச்சினை. இனப்பிரச்சினை, பயங்கரவாத நடவடிக்கைகள், பொருளாதாரச் செயற்பாடுகளின் மந்தப் போக்கு மற்றும் தற்போதைய நிச்சயமற்ற தன்மைபோன்ற காரணிகள் தனியார்துறை அதன் நடவடிக்கைகளை விஸ்தரிப்பதினின்றும் தடுத்து வந்தன. அரசாங்கத் துறையையும் இது பாதித்தது. குடும்ப ஒற்றுமை குறித்த பாரம்பரியமாதிரிகள் இப்பொழுது பலவீனமடைந்து வருவதனால் குடும்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்கூடாக வேலையற்றோர் பெற்றிருந்த பாதுகாப்பு முறையும் இப்போது அருகி வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டமே வறுமைக்கான முக்கிய காரணமாகும். வேலையின்மை தனிநபர்மீது உளவியல் பாதிப்புக்களையும் ஏற்படுத்துகிறது." [27]

விளக்கம்:

தடித்த எழுத்திலுள்ள சொற்றொடர் தரும் விரிவுக் கருத்து யாது?

"தொழில் தேடும் முயற்சி கைகூடாதபோது ஒருவர் விரக்தியும் வெறுப்பும் கொள்கிறார். குடும்பமும் அவரை ஒரு சுமையாகக் கருதத் தொடங்குகிறது. தான் வேண்டப் படாதவராக இருப்பதுடன் தனக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லையென்பதையும் அவர் உணர்கிறார். இது இவரை ஒரு குடும்பத்துக்குள்ளேயே ஒரு கலகக் காரனாக மாற்றிவிடு கிறது. அத்துடன் தனக்கு எந்த எதிர்கால நம்பிக்கையை யும் தராத சமூகத்திற்கெதிராகவும் அவர் கிளர்ந்தெழு கிறார். வேலையின்மை இவ்வாறு உளவியல் பாதிப்புகளைத் தோற்றுவிக்கிறது."

## 4.3. பயிற்சி:

"சில மனிதர்கள் நாய் என்ற பதத்தைத் தாம் மற்ற வர்களுடன் மனக்குரோதம் கொள்ளும் காலத்திலும் பிற ருடன் நேருக்குநேர் சினங்கொண்டு பேசும் நேரத்திலும், மற்றவர்களின் குற்றம் குறைபற்றி முறைப்படும் சமயத் திலும், இழிவான செயலில் ஒருவன் ஈடுபட்டான் என அறியும் பொழுதும் தாராளமாக உபயோகிக்கின்றனர். எனவே இவற்றிலிருந்து நாம் ஒன்றைமட்டும் உணரக் கூடியதாக இருக்கின்றது. நாய் நன்றியுடையதாக மனி தனுக்கு உதவினாலும், மனிதன் நாயை மிக இழிவான இடத்தில் வைத்தே நோக்குகிறான். 'வைக்கோல் பட்டடை நாய்போல' என்ற சொற்றொடர் வாக்கியம் இன்று நம்மவர் மத்தியில் சாதாரணமாக எடுத்துப் பேசப்படுகின்றது." [28]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.4. பயிற்சி:

பின்வரும் உரைப் பகுதியில் தடித்த எழுத்திலுள்ள சொற்றொடர்களை விளக்குக.

''1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை அமெரிக்க விண்வெளிக் கலமான அப்போலோ - 11, சந்திரனின் மேற்பரப்பில் இறங்கியது. அதில் பயணம் செய்த நீல் ஆம்ஸ்ட்ரோங், எட்வின் ஆல்ட்ரின் ஆகிய இருவரும் சந்திரத் தரையில் கால் பதித்தனர். நீல் ஆம்ஸ்ட்ரோங் சந்திரனில் முதல் கால் வைத்த மனிதன். அவர் சொன்னார்! **''அது மனிதனுக்கு ஒரு சிறு அடிதான். ஆனால் மனித குலத்திற்கு ஒரு மாபெரும் பாய்ச்சல்.''** [29]

## 4.5. பயிற்சி:

''வலிமைதான் நீதி, வலிமை பொருந்திய அரசாங்கத்தினர் தங்கள் அனுகூலத்திற்காகச் சட்டங்களை உண்டாக்குகின்றார்கள். சட்டங்களை மீறுபவர்களை அநீதி புரிந்தவர்களாகக் குற்றம் சாட்டித் தண்டிக்கிறார்கள். ஆகவே பலவானுக்கு எது அனுகூலமாயிருக்கிறதோ அதுவே பலஹீனமானவர்களுக்கு நீதியாகிறது. கடலில் அளவு மீறிய பாரங்கள் ஏற்றப்பட்ட கப்பல் மூழ்கிவிடுவதுபோல, அளவு மீறிய அதிகாரங்களைப் படைத்த அரசாங்கம் கவிழ்ந்துவிடும். ஒருவனுடைய உடலிற்கு அளவு மீறிய உணவும், அவன் மனதுக்கு அளவு மீறிய அதிகாரமும் ஏறிவிடுமானால் அவனுடைய உடலுக்கு வியாதியும் அவன் மனதுக்கு அநீதியான மமதையும், அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் வெறியும் ஏற்பட்டுவிடும். இந் நிலையில் ஆட்டோகிரஸி (தம்மாட்சி) அதன் அடிப்படைக் கொள்கையில் எல்லைமீறிப் போவதனாலேயே அழிந்து போகிறது'' [30]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம்: ஐந்து

# கிரகித்தல் மாற்றுக் கூற்றுக்கள்

கிரகித்தலின் மூன்றும் அடிப்படை ஒரு வாசகப் பகுதிக்குப் பலர் கூறும் பொருந்தாக் கூற்றுக்களையும் பொருந்துங் கூற்றுக்களையும் அவதானித்து சரியான, கூற்றினைக் கண்டறிதலாகும்.

பின்வரும் பந்தியைப் பார்க்க.

''விண்ணப்பதாரி கிராமோதய சபைப்பிரதேசத்தில் வசிப்பவராகவும் இலங்கைப் பிரசையாகவும் இருக்க வேண்டும். இத் திட்டத்தின் பிரகாரம் பெருந்தோட்டத் துறையைச் சார்ந்த தொழிலாளர்கள் தகுதியற்றவர்களாகக் கொள்ளப்படமாட்டார்கள்.''

இக்கூற்றிற்கு மூவர் மூன்று விளக்கந் தருகின்றனர்.

ஒருவர்: ''பெருந்தோட்டத் துறையைச் சார்ந்த தொழிலாளர் ஆயினும் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.''

மற்றவர்: ''பெருந்தோட்டத் துறையைச் சார்ந்த தொழிலாளர் இலங்கைப் பிரசையாக இல்லாவிடினும் விண்ணப்பிக்கலாம்.''

இன்னொருவர்: ''இந்தியத் தொழிலாளர் விண்ணப்பிக்க முடியாது, இலங்கைத் தொழிலாளர் மட்டும் விண்ணப்பிக்கலாம்.''

இம்மூன்று கூற்றுக்களில் முதலாம், மூன்றுங் கூற்றுக்கள் பொருந்தாக் கூற்றுக்களாகும். இரண்டாம் கூற்றே பொருந்துங் கூற்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.1. பயிற்சி:

கீழே கொடுக்கப்பட்டுள்ள பந்திகள் ஒவ்வொன்றுக்கும் பின் (1), (2), (3) என்னும் மூன்று கூற்றுக்கள் உள்ளன. உமது அபிப்பிராயப்படி, இக் கூற்றுக்களுள் எது மிகவும் பொருத்தமானது என்பதைக் காட்டுக.

உதாரணம்:– (அ) என இலக்கமிடப்பட்டுள்ள பந்தியில் (1) என்ற கூற்றை மிகவும் பொருத்தமானது என்று நீர் எண்ணினுல், உமது விடை பின்வருமாறு இருத்தல் வேண்டும்: (அ) – (1).

(அ) பரீட்சார்த்தி ஒருவரின் சேவை கடந்த ஐந்தாண்டு காலத்தில் திருப்தியற்றதாயிருப்பின், அப்பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றத் தகவற்றவராவர். ஒரு பரீட்சார்த்தி 1974, ஜனவரி முதலாந் தேதிக்கு நேரடியாக முந்தியுள்ள ஐந்தாண்டு காலத்தில் அவருக்குரிய எல்லாச் சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளவராயும் (எச்சரிக்கைகள் தவிர) வேறு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகாதவராயும் இருந்தால் மட்டுமே, அவர் அத்தகைய திருப்திகரமாண சேவையுடையவரெனக் கருதப்படுவார்.

(1) குறித்த தேதிக்கு நேரடியாக முந்திய ஐந்தாண்டுக் காலத்துள் கிடைக்க வேண்டிய எல்லாச் சம்பள ஏற்றங்களையும் பெற்றுக்கொள்ளாத பரீட்சார்த்தி ஒருவர், ஒழுக்காற்றுத் தண்டனையாக ஒரு எச்சரிக்கைக்கும் ஆளாகாதவராக இருப்பின் தகவுடையவராவர்.

(2) பரீட்சார்த்தி ஒருவர் குறித்த தேதிக்கு நேரடியாக முந்திய ஐந்தாண்டு காலத்துள் கிடைக்க வேண்டிய எல்லாச் சம்பள ஏற்றங்களையும் பெற்றுக்கொள்ளத் தவறியிருந்தால், அல்லது (எச்சரிக்கைகள் தவிர) வேறு எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் ஆளாகியிருந்தால் அவர் தகவற்றவராவர்.

(3) பரீட்சார்த்தியொருவர் குறித்த தேதிக்கு நேரடியாக முந்திய ஐந்தாண்டு காலத்துள் கிடைக்க வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாச் சம்பள ஏற்றங்களையும் பெறத்தவறியிருந்தாலும், (எச்சரிக்கைகள் தவிர) வேறு எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகியிருந்தாலும் மட்டுமே திருப்தியற்ற சேவையுடையவரெனக் கருதப்படுவார்.

மேலே விபரித்த பந்தியையும் (அ), அதன் கீழ்த் தரப்பட்டிருக்கும் பொருந்தாக் கூற்றுக்களையும் பொருந்துங் கூற்றுக்களையும் அவதானிக்கில்...

பரீட்சார்த்தியின் தகுதி இரு விடயங்களில் தங்கியுள்ளது. ஒன்று தொடர்ந்து ஐந்தாண்டு காலத்திற்குச் சம்பள வேற்றம் பெற்றிருக்க வேண்டும். மற்றது எச்சரிக்கைகள் தவிர வேறு எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் ஆளாகியிருக்கக்கூடாது.

இவ்வகையில் (2) ஆம் கூற்றே பொருந்துங் கூற்றாகும். தரப்பட்ட பந்தியில் ''தகவுள்ளவர் யார்'' எனக் கூறப்படுகிறது. தரப்பட்ட விடைக் கூற்றில் ''தகவற்றவர் யார்'' எனக் கூறப்படுகிறது. எனவே இரு கூற்றுக்களும் ஒன்றே. ஆகவே விடை -

(அ) — (2).

(ஆ) எதிர்பாராத ஊறுபாடுகள் நேரினும் அவற்றை ஏற்றுக்கொண்டு சூழலைத் தொடர்ந்தும் பயன்படுத்துவதைக் குடியேற்றப் புவியியல் விளக்கிக் காட்டுகின்றது. நகர, கிராமியக் குடிசனங்கள் எரிமலைகளாலும் பூமி அதிர்ச்சியினுலும் மீண்டும் மீண்டும் பேரழிவு பெற்றவிடங்களிலேயே இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கிருர்கள். சூழலினுல் ஏற்படக் கூடிய ஒரு குறிப்பிட்டளவு எதிர்பாராச் சேதங்களை ஏற்றுக் கொண்டு, மக்களுக்கு முன்னெச்சரிக்கை செய்யும் வழி வகைகளைச் சீர் செய்வதற்குப் போராடிக்கொண்டும் அல்லது சேதங்கள் ஏற்படுங்கால் அவற்றைத் திருத்தி அமைப்பதற்கும் பெரும்பாலான மக்கள் கொண்டிருக்கும் இவ்வுறுதிப்பாடானது மனதில் கொள்ளத்தக்க ஒரு முக்கிய காரணியாகும். சூழல் மாசுபடுத்தப்படுவது பற்றி அண்மைக் காலத்தில் ஏற்பட்ட பயம் நிச்சயமாக ஆராய்ச்சியினுலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியினுலும் சமூக அமைப்பினுலும் படிப்படியாக நீக்கப்படும். ஆயினும் இந்த நூற்ருண்டில் ஒரு புதிய ஆற்றல் வாய்ந்த சக்தியொன்று செயற்படுவதை அவ தானிக்க முடிகிறது. அதாவது உலகம் முழுதிலும் எல்லா இடங்களிலுமுள்ள எல்லா மக்களுக்கும் உகந்த உன்னத வாழ்க்கை வாழ்வதற்கேற்ற சந்தர்ப்பத்தை மனிதனுல் வழங்க முடியும் என்ற நம்பிக்கையாகும்.

(1) சூழல் மாசுபடுதல் ஒரு விரும்பத்தக்க எதிர் பாராத ஊறுபாடு அல்ல.

(2) தொடர்ந்து சூழலைப் பயன்படுத்தும்போது எதிர் பாராத சேதங்கள் முக்கிய காரணிகளாகக் கணிக் கப்படுவதில்லை.

(3) எதிர்பாரா ஊறுபாடுகளை எதிர்நோக்க வேண்டு மென்பதைக் குடியேற்றப் புவியியல் எடுத்துரைக் கிறது.

(இ) நாம் எதைச் செய்தாலும் அச்சுறுத்தித் தடுக் கும் முறையையோ, ஆயுத ஒழிப்பு முறையையோ, அல்லது இரண்டுங்கலந்த முறையையோ எதைக் கடைப்பிடித்தா லென்ன, மனுக்குலம் எதிர்நோக்க வேண்டியுள்ள பேரழிவு பற்றிய அபாயங்கள் நீடித்திருக்கவே செய்யும். ஆயினும் இருவயிரெுத்த முற்றழிவுக்கான இயல்தகவை நிகழரிய தாக்குவதற்கு அரசாங்கங்கள் முன்னிலுங் மிகுதியாக உறுதி பூண்டு வருகின்றன என்பதற்கு ஓரளவு சான்றுண்டு.

(1) மனுக்குலம் பேரழிவின்றித் தப்ப முடியாது.

(2) அரசாங்கங்கள் மட்டுமே மனுக்குலத்தைக் காக்க முடியும்.

(3) பேரழிவைத் தவிர்ப்பதற்கு அரசாங்கங்கள் மனுக் குலத்திற்கு உதவ முடியும்.

## 5.2. பயிற்சி:

பின்வரும் பந்திகளின் கீழ்த் தரப்பட்டிருக்கும் கூற்றுக் களில் பொருந்துங் கூற்றினைக் கண்டறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) வாக்கெண்ணும் அறைகள் யாவும் மின்சக்தி விநியோகத்தினால் நன்றாக வெளிச்சமூட்டப்படுவதுடன் தன்னியக்க மின்னுற்பத்தி இயந்திரத்துடன் இணைக்கப் பட்டிருத்தலும் வேண்டும். இச்சக்திகளுக்கு மேலதிகமாக ஏதேனும் விதத்தில் அவைகளில் சக்தி தடைப்பட்டால் உடனடியாகப் பாவிப்பதற்கு எண்ணெய் அழுத்த விளக்கு கள் பற்ற வைத்து மூலையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். வாக்கெண்ணும் அலுவலர்களுக்கு மின் அழுத்திகள் வழங்கப்பட்டிருந்தன.

(1) எக்கட்டத்திலும் வாக்கெண்ணப்படும் அறை இரு ளில் விடப்படக்கூடாது.

(2) மின்சக்தி இல்லாது போயினும் வாக்கெண்ணல் நடைபெறவேண்டும்.

(3) மின்சக்தி நின்றாலும் மின்னுற்பத்தி இயந்திரம் வெளிச்சம் தரவேண்டும்.

(ஆ) அண்மைத் தசாப்தங்களில் உலக உணவு வியா பாரப் பாங்கு கணிசமானவளவு மாற்றமடைந்துள்ளது. ஒரு தலைமுறைக்கு முன்பு மேற்கு ஐரோப்பாவே இறக்குமதி செய்யும் ஒரேயொரு பிரதேசமாகவிருந்தது. ஏனைய கண் டங்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரளவில் தானியத்தை ஏற்றுமதி செய்து வந்தன. 1976 அளவில் இந்த நிலைமை அடையாளந் தெரியாத அளவிற்கு மாற்றப்பட்டுவிட்டது. கடந்த சில ஆண்டுகளின் போக்குக்கள் தொடர்ந்திருக்குமா யின் நூற்றிற்கு மேலான இறக்குமதி செய்யும் நாடுகளின் கூட்டான இறக்குமதித் தேவைகள் வட அமெரிக்காவி லிருந்து, குறிப்பாக அறுவடை குறைவாகவிருக்குங் காலத் தில், ஏற்றுமதி செய்யத்தக்க வழக்கங்களைக் காட்டிலும் மிக அதிகமாகவிருக்கும்.

(1) உலக உணவு வியாபாரப்பாங்கிலுண்டான மாற் றம், வழங்கல்கள் குறைவடைவதற்கு வழிவகுத் துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) அறுவடை குறைவாக இல்லாவிட்டால் குறைபாடு இராது.

(3) உணவை ஏற்றுமதி செய்தவை இறக்குமதி செய்வனவாய் மாறிவிட்டன.

(இ) வருமானவரி செலுத்துவதற்குக் கடப்பாடுடையவரான ஒவ்வொரு பணிசெய்வோரினதும் தொழில் வருமானத்தின் மீது செலுத்தற்பாலதான வருமான வரியைப் பணிகொள்பவர் கழிப்பார். திணைக்களம் அளித்துள்ள வரிக்கழிப்பு அட்டவணையின் அடிப்படையில் இவ்வரி கழிக்கப்படும்.

(1) பணிசெய்வோர் தமது வருமானவரியைப் பணிகொள்பவரிடம் செலுத்துதல் வேண்டும்.

(2) எல்லா உத்தியோகத்தர்களும் வருமானவரி செலுத்தவேண்டும்.

(3) பணிசெய்வோரின் தொழில் வருமானத்தில் வரி செலுத்தற்பாலதான வரியைப் பணிகொள்பவர் கழிப்பார்.

## 5 3 பயிற்சி:

பின்வரும் பந்திகளில் தரப்பட்டிருக்கும் பொருந்துங் கூற்றுக்களைக் கண்டறிக.

(அ) அலுவலாளர் ஒருவர் தமது திணைக்களத்தின் பிரதிநிதியாகப் பிரயாணம் செய்யும்போது, அவர் விடுதியகத்தில் தங்குவதற்கும் அவரது உணவுக்கும் ஒரு தொகைப் பணம் கொடுக்கப்படும். ஆனால் இது அவரது முழுச் செலவையும் அடக்குவதற்காகவன்றி, அவரது மனைவி வீட்டில் மிச்சம் பிடிப்பதை விட்டு, மேலதிகமாக அவருக்கு உண்டாகும் செலவை அடக்குவதற்கு மாத்திரம் கொடுக்கப்படுகிறது. ஆயினும் அவரது செலவு அவரது படியைக் காட்டிலும் அதிகமாயிருத்தல் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) அலுவலாளர் ஒருவர் அவரது மனைவி மிச்சம் பிடிக்கும் அளவுக்கு நட்டமடைகிறார்.

(2) பிரயாணத்துக்காக ஒரு அலுவலாளருக்குக் கொடுக்கப்படும் பணத்தொகை போதியதன்று.

(3) அலுவலாளர் ஒருவரின் பிரயாணத்துக்கான முழுச் செலவும் அரசாங்கம் கொடுக்கும் தொகையினால் ஈடுசெய்யப்படுவதில்லை.

(ஆ) ஒரு காலத்திற்கு ஏற்புடையனவாக இருந்த கொள்கைகள் மற்றொரு காலத்தில் வழக்கிறந்து போகின்றன. தெய்வீக உரிமைக் கொள்கையானது நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. நம்பிக்கை தளர்ந்துபோகத் தொடங்கியதும் அத்தோடு பகுத்தறிவானது தத்துவ ஆராய்ச்சிக்குக் கருவியாக அமைந்ததும் இக்கோட்பாடு தேவைக்குப் போதாததொன்றாகவும் திருப்தியற்றதொன்றாகவும் காணப்பட்டது.

(1) நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்ட கொள்கைகள் எக்கால சமூகத்திற்கும் ஏற்புடையன.

(2) சமூகம் மாறுகிறபோது கருத்துக்களும் மாறுகின்றன.

(3) பகுத்தறிவோடு இணைந்த கொள்கைகள் எக்காலத்திற்கும் ஏற்புடையன.

(இ) உயிர்ச்சத்துக்கள் எனப்படுபவை உணவில் தேவைப்படுகின்ற உடலுறுப்புகளுக்கு வேண்டிய பொருள்களாகும். மனிதவுடல் உற்பத்தி செய்யமுடியாத காரணத்தால் அல்லது உடலானது தேவைக்குப் போதா அளவைத் தயாரிப்பதனால் இவை தேவைப்படுகின்றன. எல்லாமாக நாளாந்த உணவில் தேவைப்படுகின்ற பதின்மூன்று உயிர்ச்சத்துக்கள் ஒரு தேக்கரண்டியின் எட்டிலொரு பங்கு அளவினை மாத்திரம் கொண்டதாகும். தேவையான அளவுக்கு விஞ்சிய உயிர்ச்சத்துக்கள் உடலிலிருந்து வெளியேற்றப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. அல்லது உடலின் கொழுப்புச் சத்திலும் பிற உறுப்புக்களிலும் சேர்த்து வைக்கப்படுகின்றன. உடலின் கட்டுமான அளவு அல்லது தேவைக்கு மேற்பட்டவைவற்றின் சேர்க்கை எந்நாளும் கடினமான பாதிப்புகளுக்குக் காரண மாகின்றது.

(1) உயிர்ச்சத்துக்கள் உடலிற்குத் தீங்கு விளைவிப்பன.

(2) மனித உடலானது உயிர்ச்சத்துக்களை உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றலையுடையது.

(3) உடற்கொழுப்பானது உயிர்ச்சத்துக்களைத் தீங்கு விளைவிக்கக்கூடிய பொருள்களாக மாற்றுகின்றது.

## 5.4. பயிற்சி:

(அ) ஒரு நாடு குறித்த ஒரு பொருள் சம்பந்தமாகத் தனது தேவையைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய முழுத் தொகையையும் உற்பத்தி செய்ய முடியாதிருக்கலாம். ஆயினும் அம்மொத்தத் தேவையில் அரைவாசியையேனும் உற்பத்தி செய்ய வல்லதாகவிருக்கலாம். அவ்வாறு இருப் பினும் அப்பொருளை வேறொரு நாட்டிலிருந்து மலிவாக இறக்குமதி செய்ய முடியுமாயின், அப்பொருளை இறக்குமதி செய்யவே அந்நாடு விரும்பும் எனலாம்.

(1) உலகின் எல்லா நாடுகளும் ஏதோ ஒருவகையில் பொருட்களை இறக்குமதி செய்து வருகின்றன.

(2) உலக நாடுகள் இறக்குமதி செய்வது அந்த நாடு களில் உற்பத்தி செய்ய முடியாத பொருள்களை யாகும்.

(3) உலக நாடுகள் இன்று இறக்குமதி செய்வது அந்த நாடுகளால் எந்த வகையிலும் உற்பத்தி செய்ய முடியாத பொருள்களை மட்டுமன்று.

(ஆ) அமைச்சரவையாலும் பாராளுமன்றத்தாலும் கொள்கை சம்பந்தமாக எடுக்கப்படும் முடிவுகளைச் செயற் படுத்துவதே சிவில் சேவையின் கடமையாகும். அத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கை தானும் கீழ்மட்டங்களிலிருந்து பெறும் மதியுரையினால் உருவாக்கப்படவேண்டும். தனது நீண்ட கால அனுபவத்தினால் நிருவாகி, அமைச்சின் அரசியற்றலைவருக்கு மதியுரை வழங்கும் நிலையில் உள்ளார். ஆகவே முடிவுகளைச் செய்யும் பொறுப்பு அமைச்சர் கையில் இருப்பினும், அவர் முடிவுகளைச் செய்வதற்கு ஆதாரமாகக் கொள்ளத்தக்க உண்மைச் செய்திகளையும் நியாயங்களையும் நிரந்தர அலுவலாளர்கள் அவருக்குச் சமர்ப்பிக்க வேண்டியவர்களாகவுள்ளனர்.

(1) சிவில் சேவை மதியுரை வழங்க, அமைச்சர் முடிவு செய்கிறார்.

(2) சிவில் சேவை மதியுரை வழங்க, அமைச்சரவையும் பாராளுமன்றமும் முடிவு செய்கின்றன.

(3) முடிவுகள் அமைச்சரால் செய்யப்படுவதாகத் தோன்றினும், உண்மையில் நிரந்தர அலுவலாளர்களே முடிவு செய்கின்றனர்

(இ) ஆராய்ச்சியை நடத்துவதற்கான வழி யாதெனில் ஒரு விடயம் பற்றிப் பெருந்தொகையான அவதானிப்புகளையும் பரிசோதனைகளையும் திரட்டி, அவற்றை முறைப்பட ஒழுங்கு செய்வதாகும். அப்போது தரவுகளை விளக்குவதற்குக் கருதுகோள் ஒன்றை ஒருவர் முன்மொழியலாம். ஆயினும் அது தொடர்ந்து செய்யும் பரிசோதனையால் சோதிக்கப்படல் வேண்டும். பரிசோதனையால் தவறென நிறுவப்படும் கருதுகோள் அல்லது கொள்கை எதுவும் உடனடியாகவே கைவிடப்பட வேண்டும்.

(1) பரிசோதனையே வலிதான கருதுகோள் ஒன்றின் அடிப்படையாகும்.

(2) ஆராய்ச்சி என்பது அவதானிப்புகளாலும் பரிசோதனைகளாலும் அமைவதாகும்.

(3) ஆராய்ச்சியானது அவதானிப்புகள், பரிசோதனைகள் என்பனவற்றின் முறையான ஒழுங்கமைப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 5. பயிற்சி:

(அ) இந்த யுகத்தில் விஞ்ஞானத்தின் பரந்த அடிப் படைத் தத்துவங்களை விளக்கி நயப்பதற்கு அக்கறையுடன் முயற்சி செய்யாத எந்த ஒரு மனிதனும் பண்பட்ட மனிதன் எனக் கருதப்படமாட்டான். தமது சொந்த ஆய்வுப் புலத் திற்கு அப்பால் அக்கறை கொள்ளாத சில விஞ்ஞானிகள் இருக்கின்றனரேயாயினும், பொதுவாக விஞ்ஞானிகள் மனி தர்களின் அலுவல்களிலும் கலைகளிலும் விரிவான அக்கறை கொண்டிருப்பதைக் காணலாம். ஆனல் பண்பட்ட அறி வாளிகள் என்று சொல்லப்படுவோரில் விஞ்ஞான வரலாறு பற்றியோ, விஞ்ஞானக் கொள்கைகள் பற்றியோ அற்ப அளவேனும் அறிந்திருப்பவர் மிகச் சிலரே.

(1) கலைகளைப்பற்றி அறிந்துள்ள விஞ்ஞானிகளைக் காட்டிலும் விஞ்ஞானத்தைப்பற்றி அறிந்துள்ள பண்பட்ட மக்கள் பலர் உள்ளனர்.

(2) பண்பட்ட மனிதன் ஒருவன் விஞ்ஞானத்தைப் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும்.

(3) கலைகள், விஞ்ஞானத்தின் பரந்த அடிப்படைத் தத்துவங்களை உள்ளடக்கியனவாயிருத்தல் வேண் டும்.

## மேற்கோள் பந்திகளுக்கான ஆதாரங்கள்

1. இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசிய லமைப்பு, - 1978. பக்கம் - 6.

2. சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், பாஸ்தல் கிஸ்பர்ட் (தமிழாக்கம்), தமிழ்நாட்டுப் பாடநூற் சபை, பக்கம் - 70.

3. வரி முறை, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், 1976 / 77. பக்கம் - 25.

4 5, 6, 7 இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக் கோவை - 1974.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. புதிய சமூகக்கல்வி - 9, அரசாங்க வெளியீடு.
பக்கம் - 310.

9. 10, 11, 13, 14, 15, 16. 22. இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை வினாத்தாள்கள் - 1974, 1977, 1981.

12. புதிய சமூகக்கல்வி - 10. 1. பக்கம் - 39 / 40.

17. பத்து லட்சம் வீடுகள் அமைக்குந் திட்டம், வழிகாட்டல் கள், உள்நாட்டமைச்சின் வெளியீடு. பக்கம் - 4.

18. முன்னேற்றப்பாதச் சுவடுகள் - 1983. உள்நாட்டமைச் சின் வெளியீடு. பக்கம் - 4.

19. இளைஞரும் அபிவிருத்தியும், இலங்கை மன்றக் கல்லூரி வெளியீடு - 1979. பக்கம் - 8.

20. புதிய சமூகக்கல்வி - 10. 1. பக்கம் - 60.

21. அரச அறிவியல், கல்வி வெளியீட்டுத் திணைக்கள வெளியீடு - 1976. பக்கம் - 1.

23. இலங்கையின் முதலாவது சனாதிபதித் தேர்தல் பற்றிய அறிக்கை, 1983. பக்கம் - 29.

25. வழிகாட்டல்கள், பத்து இலட்சம் வீடமைப்புத் திட் டம், பக்கம் - 2 / 3.

26. பண்ணுட்டுப் பொருளியல் - ம. பாலசுப்பிரமணியம், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் - 1973. பக்கம்-9.

27. பொருளியல் நோக்கு - ஆகஸ்ட் - 1988. பக்கம் - 5.

28. மக்கள் வாழ்வில் பழமொழி - சச்சி மாஸ்ரர்,
சுகிர்தா பதிப்பகம் - 1988.

29. சந்திரனின் கதை - க. குணராசா, எம். ஏ.
ஸ்ரீ லங்கா புத்தகசாலை - 1986.

30. சிந்தனையாளர் பிளேட்டோ - அரு. இராமநாதன்-1974.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சிகள் சிலவற்றிற்கான விடைகள்

## அத்தியாயம்: ஒன்று

### 2.6. பயிற்சி:

1. வறிதாகும் நிலவளம்
2. காடுகள் அழிவுற்றுப்போக மண்ணரிப்பு நிகழ்கிறது. அதனுல் புதிய வடிகால்கள் உருவாகின்றன. கழுவு நீரோட்டம் ஆழமான கால்வாய்களைத் தோற்றுவிக்கின்றது.

### 2.7. பயிற்சி:

(அ)

1. உலக அமைதி / அணு தரும் உலக அமைதி.
2. இன்று உலகப்பெரும்போர் மூளாமலிருப்பதற்கு அணுவின் அழிவு தரும் பயம் பிரதான காரணமாகும். உலகில் ஓரளவு அமைதியை உண்டாக்கியுள்ள அணு என்ற பொறிமுறையைச் செயலற்றதாக்குவது உலக அமைதிக்கு ஊறு விளைவிப்பதாக அமையும்.

(ஆ)

1. சமய நோக்கம்
2. எக்காலத்துக்கும் எல்லா மதத்தவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆன்மிக நோக்கமே, சமய நிறுவிகளின் ஞான அறிவின் மையக் கருத்தாகும். ஒழுக்கம், ஆன்மிகம் என்பன எம்மதத்திற்கும் பொதுவான மையக் கருத்தாகும்.

(இ)

1. கட்சி நியமனங்கள்
2. அரசியற் சார்புள்ள நியமனங்கள் – அரச உத்தியோகத்தர்கள் கட்சி சார்பற்றவர்களாக இருக்கவேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் எனப் பொதுவாகக் கருதப்படுகின்றது. எனினும் ஆளுநங்கட்சியின் இலட்சியங்களைச் சரிவர நிறைவேற்ற ஆளுநங்கட்சியினரின் ஆதரவாளர்களை நியமிப்பது வழக்கமாகியுள்ளது.

இயல்பாகவே இந்த வகையான நியமனங்கள் நிருவாக வினைத்திறமைக்கு உத்தரவாதமளிக்கின்றன - அரசியற் சார்புள்ள நியமனங்கள் ஆளுநங் கட்சியினரின் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வழிவகுக்கும். அரசியலதிகாரி, மாவட்ட அமைச்சர், வேலைவங்கி என்பன இவ்வகை முயற்சிகளே. மாற்றுக் கட்சியைச் சார்ந்த உத்தியோகத்தர்கள் ஆளுநங் கட்சியின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் நாட்டங்காட்டார்.

## 2.8. பயிற்சி:

(அ)

1. புதிய பொருளாதார முறைமை
2. சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகளே முதன்மை வகிக்கின்றன. அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் முதனிலைப் பொருட்களை (மூலப்பொருட்களை) ஏற்றுமதிசெய்கின்றன. அபிவிருத்தியடைந்த நாடுகள் முடிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்கின்றன. இவ்வர்த்தகப் பரிமாற்றத்தில் முதனிலைப் பொருட்களை வாங்கும் விலையையும், முடிவுப் பொருட்களை விற்கும் விலையையும் அபிவிருத்தியடைந்த நாடுகளே தீர்மானிப்பதால் வர்த்தகப் பொருட்கள் மீது அபிவிருத்தியடைந்த நாடுகளே ஆதிக்கம் வகிக்கின்றன.

(ஆ)

1. வரலாற்று மெய்மை
2. ஒரு பிரதேசத்தின் பௌதிகப் பண்பாட்டுச் சூழல் நிலைமைகளுக்கு இணங்கவே அப்பிரதேசத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகம் அமைகின்றது. நாகரிகங்களுக்கிடையிலான மோதல்களே வரலாறு ஆகும். எனவே சமூகப்புரட்சி, போராட்டம் என்பன ஒரே வகையினதாக இருந்தாலும் அவை நாட்டிற்கு நாடு வேறுபாடு கொள்வதற்குக் காரணம் சூழலமைவு ஆகும். பிரான்சியப் புரட்சி, ருசியப் புரட்சி, சீனப் புரட்சி என்பன வெவ்வேறு சூழலமைவு சார்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

(இ)

1. சூழலைப் பாதுகாத்தல்

2. உயிரினங்களின் பரிணாமத்தை (உள்ளது சிறத்தலை) ஆராய்ந்து விளக்கியவர்கள், உயிரினங்களின் படிமுறை வளர்ச்சிக்கு விளக்கந் தந்துள்ளனர். எந்த உறுப்புக் கூடுதலாகப் பயன்படுகிறதோ அது வளரும் என்றும், வலிமையானது எஞ்ச வலியையற்றது அழியும் என்றும் கூறியுள்ளனர். எனவே ஒரு பிரதேசத்தின் இயற்கைச் சூழலே அப்பிரதேசத்தில் வாழும் உயிரினங்களின் உருவ அமைப்பையும் இயல்புகளையும் உருவாக்குகின்றது. சூழலே அவற்றைப் பேணிப்பாதுகாக்கின்றது. இயற்கைச் சூழல் அழியும் போது அவற்றில் பல அழிவதுடன் பல புதிய சூழலுக்கு ஏற்ப உருவச் சிதைவையும் பெற நேரிடுகின்றது.

## 2.9. பயிற்சி :

(அ)

1. தொழில் நுட்ப விளைவு

2. மனித நாகரிகத்தின் வளர்ச்சி, தொழில் நுட்பத்துடன் இணைப்புடையது. தொழில் நுட்ப விருத்தியின் விளைவாகத் தான் நவீன மனித நாகரிகம் உருவாகியது. தொழில் நுட்ப வளர்ச்சி மனிதனை சூழலிலிருந்து விலக்கி வருகின்றது. சூழலின் கட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டிலிருந்து மனிதன் விடுபட்டு வருகின்ற போக்கினைக் காணலாம். எனவே தொழில் நுட்பம் நிலத்தையும் மனித தொழில்களையும் ஒழுங்கு படுத்துவதாக அமைய வேண்டும். அவ்வேளை தான் இயற்கைச் சூழலை சிறந்த வாழ்க்கைக்குரியதாக உருவாக்க முடியும்.

(ஆ)

1. பாரம்பரியம்

2. மூதாதையரின் உளப்பண்புகள் பாரம்பரியமாக, தலைமுறை தலைமுறையாகப் பிறக்கும் குழந்தை களில் ஒப்புவிக்கப்பட்டு வருகின்றது. உயிர்மத்தின் இணைமரபுக்கீற்றுக்களில் ஏதாவது ஒன்று அல்லது சில கருக்கொள்ளுங் காலத்தில் சேர்ந்துவிடுகின் றன. சில இணைமரபுக்கீற்றுக்கள் அழிவதும் விலக் கப்படுவதுமுண்டு. ஆனால் பாரம்பரியம் எங்கோ எவ்வடிவிலோ வெளிப்படவே செய்யும்.

(இ)

1. வீடமைப்பு

2. வீடுகளைப் பாவிக்கப்போகின்றவர்களே வீடுகளை அமைப்பதற்கான செலவு, தொழில் நுட்பம், மாதிரி, தரம், உள்ளக அமைப்புமுறை, மாதிரி வடிவமைப்பு, சுற்றுடல் போன்ற பல குறித்து முக்கிய தீர்மானம் எடுப்பர். எங்கு, எப்படி, யாரால் வீடுகள் அமைக்கப்படும் என்ற தீர் மானத்தை எடுப்போரும் அவர்களாகவே இருப்பர்.

## 2.10. பயிற்சி:

(அ)

1. பணி மிகு ஆண்டு

2. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எதிர்நோக்கும் பொருளாதார சமூகப் பிரச்சினைகள் பலவாகும். மூலதனப் பற்றுக்குறை, உணவில் தன்னிறை வின்மை, முதனிலைப் பொருட்களின் ஏற்றுமதியால் நிலவும் வர்த்தகமந்தம், தொழில் நுட்பப் பற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறை முதலான பொருளாதாரப் பிரச்சினைகளோடு, வாழ்க்கைத்தரக்குறைவு, வறுமை, கல்வியறிவுக் குறைவு, துரித குடிப்பெருக்கம், சுகாதார மருத்துவத் துறைகளில் விருத்தியின்மை முதலான சமூகக் காரணிகளும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளாகும்.

(ஆ)

1. இன்றைய இளைஞர்

2. இன்றைய உலக இளைஞர்கள் பலர் மனத்தளவில் விரக்தியான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தாமாகத் தேடிக்கொண்டதும் சமூகந் தேடிக் கொடுத்தவையும் தாம் இவை. வாழ்க்கையிலேற் படும் விரக்தியால் இளைஞர்களில் சிலர் வன்செயல், புரட்சி, தற்கொலை, போதைமருந்து, அதிகாரத் துக்குச் சவால் விடுதல் ஆகியவற்றில் ஈடுபடுகிறார் கள் விரக்தி தந்த மனக்கிளர்ச்சி சமூகத்தொடர்பு, சமூக மதிப்பு என்பனவற்றைப் பற்றிச் சிந்திக்க விடுவதில்லை.

## அத்தியாயம்; ஐந்து

4.1. பயிற்சி — 1

(அ) — (2) (ஆ) — (2) (இ) — (3)

4.1. பயிற்சி — 2

(அ) — (1) (ஆ) — (3) (இ) — (3)

4.1. பயிற்சி — 3

(அ) — (3) (ஆ) — (2) (இ) — (3)

4.1, பயிற்சி — 4

(அ) — (3) (ஆ) — (2) (இ) — (3)

4.1. பயிற்சி — 5

(அ) — (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரகித்தல்

## COMPREHENSION

க. குணராசா *B.A. Hons (Cey) M.A.S.L.A.S*

**கிரகித்தல்**

சொல்பவற்றிலிருந்தும் படிப்பவற்றிலிருந்தும் மெய்க் கருத்தைப் புரிந்து கொள்வது கிரகித்தலாகும். ஒரு வாசகப் பகுதியைப் படிக்கும்போது, அல்லது கேட்கும்போது அதற்கான அர்த்தம் இரண்டாக இருக்க முடியாது. அர்த்தம் ஒன்றாக இருக்க அதன் பொருளைப் பலவாறாகப் புரிந்து கொள்பவர்கள் இருக்கிறார்கள். அர்த்தத்தைச் சரியாகப் புரிந்து கொள்பவர்களும் இருக்கிறார்கள் சரியாகப் புரிந்து கொள்பவன் அதன் மெய்க்கருத்தைப் புரிந்து கொள்கிறான். கிரகிப்புத்திறன் வாய்ந்தவனாக இருக்கிறான். ஒருவனின் கிரகிப்புத்திறனை வெளிக்கொணர்ந்து அவன் அறிவுத்திறனை மதிப்பிடுவதற்குப் பல முறைப் பயிற்சிகளுள்ளன. அவற்றினை இந்நூலில் விரிவாக ஆராய்வோம்.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org